Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, JULY 28, 2021

புதன்கிழமை, 28 ஜூலை 2021 | ஒளி: 07 கதிர்: 59 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## “வாருங்கள் சுற்றுலா வாருங்கள்”

**சீனப் பிரஜைகளை அழைத்தார் ஜனாதிபதி**



இலங்கைக்கு மீண்டும் சுற்றுலா மேற்கொள்ள சீன மக்களுக்கு அழைப்பு விடுப்பதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு விவகாரம்

# பேச்சு தோல்வி



- பட்ஜெட்டில் தீர்க்க அமைச்சரவையில் முடிவு
- அடுத்த வாரம் தீர்வு காண்போம்: பிரதமர்
- போராட்டம் தொடரும்: தொழிற்சங்கங்கள்

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு விவகாரம் தொடர்பில் நேற்று (27) நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்துள்ளதால், தங்களுடைய போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கள் தெரிவித்துள்ளன.

பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். அவ்வாறு இல்லாமல், இழுத்தடிப்புகளை செய்து, பிரச்சினைகளை மழுங்கடிக்கச் செய்யும் செயற்பாடுகளிலேயே அரசாங்கத் தரப்பினர் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்றுமுன்தினம் (26) இரவு கூடிய அமைச்சரவை, இந்தப் பிரச்சினைக்கு அடுத்த வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாகத் தீர்ப்பதற்கான முடிவை எட்டியிருந்தது.

தொடர்ச்சி P2

### அம்பாறை மாவட்டத்தில் கொரோனா

## 100 மரணங்கள் பதிவு; திருக்கோவிலில் பூச்சியம்



வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை, கல்முனை என இருபெரும் பிராந்தியங்கள் உள்ளன. அதற்குள், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100 ஐ தாண்டியுள்ளது.

இவற்றில் கல்முனைப் பிராந்தியத்தில் 67 மரணங்களும் அம்பாறைப் பிராந்தியத்தில் 35 மரணங்களும் சம்பவித்துள்ளன. இதன்படி, இதுவரை கொரோனாவால் 102 பேர் மரணித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## நட்சத்திர சபையர்...



உலகிலேயே ஆகக் கூடுதலான பெறுமதி வாய்ந்த நீல நிறத்திலான இரத்தினக்கல் கொத்தணி (நட்சத்திர சபையர்) கண்டெடுக்கப்பட்டுள்ளது. இரத்தினக் கற்கள் நிறைந்துள்ள இரத்தினபுரியிலுள்ள வீடொன்றில், கிணறு அகழ்ந்துகொண்டிருந்த தொழிலாளர்களால், இந்தக் கல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. வெளிர் நீல நிறத்தில் இருக்கும் இந்தக் கல், சர்வதேச சந்தையில் 100 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் வரை மதிப்பிடப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். நட்சத்திர சபையர் கொத்து, சுமார் 510 கிலோ கிராம் அல்லது 2.5 மில்லியன் கரட் நிறையைக் கொண்டுள்ளது, 'செரண்டிபிட்டி சபையர்' என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு கடன்களை சரியாக செலுத்தியுள்ளோம்



மகேஸ்வரி விஜயனந்தன்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் வெளிநாட்டு நாணய இருப்பு சரியாக பேணப்பட்டு வந்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல, இந்தத் தடவையும் 1 பில்லியன் டொலர் வெளிநாட்டு கடனை அரசாங்கம் சரியாக மீளச் செலுத்தியுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## டயகம சிறுமியின் சவக்குழிக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு



எம். கிருஸ்ணா, ரஞ்சித் ராஜபக்ஷ

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்தபோது தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த சிறுமியின் சடலம் அடக்கம் செய்யப்பட்டுள்ள டயகம தோட்டத்தின் பொது மயானத்துக்கு நேற்று (27) முதல் பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## கிணற்றில் இருந்து தம்பதியின் சடலங்கள் மீட்பு



செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன், சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, மல்லாவி, அனிஞ்சியன்குளம் பகுதியில், கிணற்றில் இருந்து, கணவன், மனைவி ஆகிய இருவரும் நேற்று (27) சடலங்களாக மீட்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## 20 நாடுகளை சேர்ந்தவர்கள் நாட்டுக்குள் நுழையத் தடை

கொரோனா தொற்று காரணமாக 20 நாடுகளைச் சேர்ந்தவர்கள், இலங்கைக்கு வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வெள்ளவத்தையில் கருகிய ‘பென்ஸ்’



வெள்ளவத்தை, மாயா மாவத்தையில் பயணித்துக்கொண்டிருந்த நவீனரக பென்ஸ் காரொன்று, நேற்று பிற்பகல் 3 மணியளவில் எரிந்து கருகியுள்ளது.

தொடர்ச்சி P2



### வடக்கு, கிழக்குக்கு

## 16 இலட்சம் தடுப்பூசிகள் டக்ளஸிடம் கையளிப்பு

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்கும் நோக்கோடு, சுமார் 16 இலட்சம் தடுப்பூசிகளை சீன அரசாங்கம், இலங்கைக்கு வழங்கியுள்ளது.

குறித்த தடுப்பூசிகளை இலங்கைக்கான சீனத் தூதுவரால் ஜனாதிபதியிடம் கையளிக்கும் நிகழ்வு, ஜனாதிபதி மாளிகையில் நேற்று (27) இடம்பெற்றது.

இதன்போது, இலங்கைக்கான சீனத் தூதுவர் கியூய் ஷென்ஙொங், தடுப்பூசிகளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளித்தார்.

தொடர்ச்சி P2

## ஹரினுக்கு சி.ஐ.டி அழைப்பு



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோவை, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

உயர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில், வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இன்று (28) காலை 10 மணிக்கு ஆஜராகுமாறே, அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுக்குச் சென்றிருந்த ஹரின் பெர்ணான்டோ எம்.பி, கடந்த 21ஆம் திகதியன்று நாடு திரும்பினார்.

தொடர்ச்சி P2

### சுகாதாரத்தை மீறினால்

## கோவில்களில் கொரோனா வரும்



என்.ராஜ்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இந்துக் கோவில்களில் சுகாதார நடைமுறை சரியாகப் பின்பற்றப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளதாக, யாழ். மாவட்டச் செயலாளர் க.மகேசன் தெரிவித்தார்

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், நேற்று (27) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அரசியல் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்க முடியாது



கொவிட்-19 நோய்த் தாக்கத்தால் நாடு பல்துறைகளில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது எனத் தெரிவித்த தொலைநோக்கு கல்வி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இவ்வாறான சூழ்நிலையில் அரசியல் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்க முடியாது என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## போராட்டங்களை கைவிட்டு கற்பித்தலை ஆரம்பிக்கவும்

மகேஸ்வரி விஜயனந்தன்



ஆசிரியர்கள், அதிபர்கள் சேவைகள் மற்றும் கல்வி நிர்வாக சேவையை மூடிய சேவையாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஷ் பத்திரண, எனவே ஆசிரியர்கள் தமது போராட்டங்களைக் கைவிட்டு, கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பேச்சு தோல்வி

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்கவேண்டும் என்பதற்கு அமைச்சரவை இணங்கியது.

இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினருக்கும் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில், அலரிமாளிகையில் நேற்று (27) பேச்சுவார்த்தையொன்றும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தையின் போது நிதியமைச்சரின் பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன். அரச சேவைகளில் உள்ளடங்கும் ஏனைய துறைகளின் சம்பள அதிகரிப்பு தொடர்பிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான பேச்சுவார்த்தை விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், மேற்படி விவகாரம் தொடர்பில், நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷவும் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளார் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இதன்போது தெரிவித்துள்ளார்.

ஆகையால், அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு பிரச்சினைக்கு அடுத்தவாரம் கூடும் அமைச்சரவைக் கூட்டத்தின் போது, கலந்துரையாடி முடிவு எட்டப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது தெரிவித்துள்ளார். இதேவேளை, தற்போதைய பொருளாதார நிலைமையின் கீழ், சம்பள அதிகரிப்பை மேற்கொள்ள முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என்றும் பிரதமர் எடுத்தியம்பியுள்ளார் என அறியமுடிகின்றது.

இந்நிலையில், சம்பள முரண்பாடுகளை தீர்க்கும் வரையிலும் இணையவழியின் ஊடாக கற்பிப்பதிலிருந்து விலகியிருப்பதற்கு எடுத்த தீர்மானம் அவ்வாறே கடைப்பிடிக்கப்படும். அத்துடன், போராட்டங்களும் முன்னெடுக்கப்படும் என அதிபர், ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க , உலப்பனே சுமங்கல தேரர் உள்ளிட்ட ஆசிரியர் சங்க பிரதிநிதிகள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

# "வாருங்கள் சுற்றுலா வாருங்கள்"

ஓகஸ்ட் மாதம் நிறைவடையும் போது, 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை வழங்கி முடிக்க முடியுமெனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை செப்டெம்பர் மாதம் முதல் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்குமெனக் குறிப்பிட்டார்.

எனவே, மீண்டும் இலங்கைக்குச் சுற்றுலா மேற்கொள்ள சீன மக்களுக்கு அழைப்பு விடுப்பதாக, ஜனாதிபதி தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட, 1.6 மில்லியன் சைனோஃபாம் தடுப்பூசிகள், ஸ்ரீலங்கன் விமானச் சேவைக்குச் சொந்தமான UL - 869 மற்றும் UL - 865 ஆகிய இரண்டு விமானங்கள் மூலம் நேற்று (27) அதிகாலை 5.30 மணிக்கு, கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தன.

இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ செங் ஹொங்கினால், ஜனாதிபதியிம், உத்தியோகபூர்வமாக தடுப்பூசிகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று (27) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றபோதே மேற்கண்ட விடயத்தை ஜனாதிபதி தெரிவித்தார்.

# 100 மரணங்கள் பதிவு; திருக்கோவிலில் பூச்சியம்

கல்முனைப் பிராந்தியத்தில் ஏற்பட்ட 67 மரணங்களுள் அதிகூடிய 10 மரணங்கள் கல்முனை தெற்கு சுகாதாரப் பிரிவிலும், 9 மரணங்கள் சம்மாந்துறைப் பிரிவிலும் இடம்பெற்றுள்ளன.

அடுத்ததாக சாய்ந்தமருது, அக்கரைப்பற்று பிரிவுகளில் தலா 7 மரணங்களும், அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவுப் பகுதிகளில் தலா 6 மரணங்களும், இறக்காமப் பகுதியில் 5 மரணங்களும், ஆலையடிவேம்பு பகுதியில் 4 மரணங்களும், பொத்துவில், கல்முனை வடக்கு பகுதியில் தலா 3 மரணங்களும் சம்பவித்துள்ளன.

இதேவேளை, இதுவரை ஒரு கொரோனா மரணமும் பதியப்படாத தனியொரு பிரதேசமாக திருக்கோவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசம் மிளிர்கிறமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு கடன்களை சரியாகச் செலுத்தியுள்ளோம்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (27) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இலங்கையின் வெளிநாட்டு நாணய இருப்பை கடந்த காலங்களிலும் தவறாமல் பேணிவந்துள்ளோம் என தெரிவித்த அவர், அடுத்த வருடம் 500 மில்லியன் டொலர் கடன் செலுத்த வேண்டியுள்ளது. அதையும் சரியாக செலுத்துவோம். கடன் செலுத்துவதிலிருந்து பின்வாங்க மாட்டோம். ஆகையால், எமது ஆட்சி நிர்வாகம் பற்றித் தவறான தகவல்களைப் பரப்புவதை எதிர்க்கட்சி தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

மஹிந்த ராஜபக்ஷ 2005ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த போது, மொத்த கடன் 102 சதவீதமாகக் காணப்பட்டது. இது 2014ஆம் ஆண்டு 76.6 சதவீதமாக குறைந்தது. இந்த நிலையில், இதனை 60 சதவீதமாக குறைப்பதே தமது அரசாங்கத்தின் இலக்காக காணப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டமாக ஆட்சி மாற்றம் நடைபெற்றதுடன், நல்லாட்சி நிர்வாகத்தின் கடன் அதிகரித்தது என்றார்.

எனினும், சர்வதேச இறையாண்மை பத்திரம் (ஐ.எஸ்.பி) நேற்று முன்தினம் (26) காலாவதியாகவிருந்தது. எனினும், அதனையும் சரியான நேரத்தில் எம்மால் திருப்பிச் செலுத்த முடிந்தது எனத் தெரிவித்த அவர், இந்த வெளிநாட்டுக் கடனை திருப்பிச் செலுத்துவதன் மூலம், 2021ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடனில் பெரும்பாலானவை திருப்பிச் செலுத்தப்படும் என்றார்.

அரசாங்கத்தின் வெளிநாட்டு இருப்புகள் சரிந்து விட்டதாகவும் வெளிநாட்டு நிறுவனங்கள் கூட நாட்டின் பொருளாதார சரிவு குறித்து பேசுவதாக குறிப்பிடும் எதிர்க்கட்சி அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறது. எனினும், முறையான நிதி நிர்வாகத்தால் எம்மால் உரிய நேரத்தில் கடனை செலுத்த முடிந்ததாகவும் எதிர்க்கட்சியின் விமர்சனங்களுக்கு நடைமுறையில் பதில் அளிக்க முடிந்தமைக்கு மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

# டயகம சிறுமியின் சவக்குழிக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு

நேற்று முன்தினம் (26) தமது மகளின் மரண பரிசோதனை அறிக்கையில் சந்தேகம் இருப்பதாகவும், மகளின் சடலத்தைத் தோண்டி, மீளவும் பரிசோதனைகள் செய்யப்பட வேண்டுமென, சிறுமியின் பெற்றோர், கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை செய்திருந்தனர்.

இந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு, கொழும்பு மேலதிக நீதவான் முன்னிலையில், நேற்று முன்தினம் (26) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சிறுமியின் சடலத்தை மீண்டும் தோண்டி எடுத்து, பிரேத பரிசோதனைக்கு மீளவும் உட்படுத்துமாறு, கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய உத்தரவிட்டார்.

இதற்கமைய, சிறுமி புதைக்கப்பட்ட இடத்தில் டயகம பொலிஸாரால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், டயகம பிரதேசத்தைச் சேர்ந்த பலர், ரிஷாட்டின் வீட்டில் பணிபுரிந்துள்ளதால் அவர்களிடம் விசாரணையை முன்னெடுக்க , கொழும்பு வடக்கு பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு டயகம பிரதேசத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வெள்ளவத்தையில் கருகிய 'பென்ஸ்'

காருக்குள் புகை கிளம்புவதை அவதானித்த சாரதியான அந்த வாகனத்தின் உரிமையாளர், காரை நிறுத்திவிட்டு புகை தொடர்பில் பரிசோதித்துள்ளார். எனினும், கார் தீப்பற்றி எரிவதை அவரால் தடுக்கமுடியவில்லை.

இது தொடர்பில், திம்பிரிகஸ்யாக பிரதேசத்திலுள்ள தீயணைப்பு பிரிவுக்கு அறிவித்துள்ளார். அங்கிருந்த வந்த ஒன்பது பேரடங்கிய தீயணைப்புப் பிரிவினர், தீயைக் கட்டுப்பாடுகளுக்குள் கொண்டுவந்தனர். இதேவேளை, கார் தீப்பற்றி எரிந்தமையால் எவ்விதமான உயிராபத்துகளும் ஏற்படவில்லை.

அந்த வாகனத்தின் உரிமையாளர், கொழும்பு-8 பாடசாலை மாவத்தையைச் சேர்ந்தவர் எனத் தெரிவித்த வெள்ளவத்தைப் பொலிஸார், மின்சாரக் கோளாறு காரணமாகவே கார் தீப்பற்றி எரிந்துள்ளது என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது என்றனர்.

# கிணற்றில் இருந்து தம்பதியின் சடலங்கள் மீட்பு

இதனையடுத்து அப்பகுதியில் பெரும் சோகம் நிலவியது.

அதே இடத்தை சேர்ந்த றஞ்சன் பிரதீபன் (வயது 31), பிரதீபன் மாலினி (வயது 27) ஆகியோரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் திருமணத்துக்கு முன்னர் பிரதேச வெதுப்பகம் ஒன்றில் கடமையாற்றிக் கொண்டிருந்த நிலையில், திருமணம் செய்துள்ளனர் எனவும் இவ்விருவரும் திருமணமாகி 10 மாதங்களே ஆகின்றன எனவும், மல்லாவி பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள், கிணற்றில் விழுந்து உயிரிழந்து இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

# 16 இலட்சம் தடுப்பூசிகள் டக்ளஸிடம் கையளிப்பு

இந்தத் தடுப்பூசிகள் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கு அமைய, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த நிகழ்வில், சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராட்சி மற்றும் சீனத் தூதரக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

# 20 நாடுகளை சேர்ந்தவர்கள் நாட்டுக்குள் நுழையத் தடை

அந்த நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும் தடைகளை நீக்க வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து செயல்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குவைத், ஐக்கிய அரபு அமீரகம், லாவோஸ், மலேசியா, மியன்மார், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், ஐக்கிய இராச்சியம், போர்த்துக்கல், இத்தாலி, ஜேர்மனி, நோர்வே, பஹ்ரைன், நேபாளம், ஜப்பான், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கட்டார், வியட்நாம் ஆகிய நாடுகளு களைச் சேர்ந்தவர்களுக்கே இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார்.

# ஹரினுக்கு சி.ஐ.டி அழைப்பு

இந்நிலையில், தன்னைக் கைது செய்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை ஏற்கெனவே ஆராய்ந்திருந்த உயர்நீதிமன்றம், ஓகஸ்ட் 1ஆம் திகதி வரையிலும் அவரைக் கைது செய்யவேண்டாமென உத்தரவு பிறப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# அரசியல் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்க முடியாது

"சுதந்திரக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு கூட்டணியின் பேச்சுவார்த்தை ஊடாகவே தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும். அதனை விடுத்து நெருக்கடிகளை ஏற்படுத்தும் வகையில் இரு தரப்பினரும் செயற்படுவது பொருத்தமற்றது" என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை சாதகமான முறையில் நிறைவுபெற்றுள்ளதாகவும் கூட்டணியமைக்கும் போது குறிப்பிடப்பட்ட விடயங்கள் தற்போது செயற்படுத்தப்படவில்லை என்றும் சுதந்திர கட்சியினர் குறிப்பிடுவதாகத் தெரிவித்த அவர், 2020 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் இவ்விரு தரப்பினருக்குமிடையில் கூட்டணி கைச்சாத்திடப்பட்டது என்பதை மறக்க கூடாது என்றார்.

எனவே, கொரோனா தொற்றுக்கு மத்தியில், கூட்டணியின் இரு தரப்பினருக்குமிடையிலான முரண்பாடுகளை களைவதற்கு உயர்மட்டத்தில் முக்கியத்துவம் வழங்க முடியாது. கூட்டணியின் பிரச்சினைகளுக்கு இரு தரப்பினரும் கூட்டணியின் ஊடாகவே தீர்வு காண வேண்டும் என்றார்.

# கோவில்களில் கொரோனா வரும்

அங்கு தொடர்ந்துரைத்த அவர், சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்துக் கோவில்களில் பூஜை வழிபாடுகள், திருவிழாக்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், சுகாதார நடைமுறையைப் பின்பற்றாது, இந்துக் கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறுவது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த நிலைமை மிகவும் ஆபத்தானது எனவும் கூறினார்.

மேலும், கரவெட்டிப் பகுதியில் உள்ள கோவிலில் திங்கட்கிழமை (26) பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டவர்களில் 49 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும் என்றார்.

# போராட்டங்களை கைவிட்டு கற்பித்தலை ஆர ம்பிக்கவும்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (27) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்த விடயம் தொடர்பில் ஆசிரியர் மற்றும் அதிபர் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் இதன்போது ஏனைய அரச பணியாளர்களின் சம்பள விடயத்தில் பாதிப்பு ஏற்படாத வகைளில், ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளமை குறித்து கலந்துரையாடப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

குறித்த தீர்மானம் தொடர்பில் கலந்துரையாடல்களில் இணக்கம் எட்டப்படுமாயின் அதனை செயற்படுத்த முதல் நடவடிக்கையாக, வரவு- செலவுத்திட்ட யோசனையில் உள்ளடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், சம்பளத்தை அதிகரிப்பது குறித்து, நிரந்தர கொள்கையொன்றை கொண்டு வர அரசாங்கம் தயாராகவிருப்பதாகத் தெரிவித்த அவர், எனவே தற்போது முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கையைக் கைவிடுமாறும் இதனால் கிராமியபுற மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஆசிரியத் தொழிற்சங்கங்களுக்கும் பிரதமருக்கும் இடையில் நேற்று (27) அலரிமாளிகையில் இரண்டரை மணித்தியாலயமாக இடம்பெற்ற கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி முடிவடைந்துள்ளது.

# சிறார்களை பணிக்கு அமர்த்துவோர் சிக்குவர்

சிறுவர்களை பணிகளில் அமர்த்தும் இடங்களைக் கண்டறிய மேல் மாகாணத்தில் நேற்று (27) முதல் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.




தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் இணைந்து, இது தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தொழிலுக்கு அமர்த்தப்பட வேண்டிய வயதெல்லையை விட குறைந்த வயதுடையவர்களை வேலைக்கு வைத்துள்ள தனிநபர்கள் மற்றும் குழுவினர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார்.

இதேவேளை, சட்ட ரீதியாக பாதுகாப்பு வழங்க வேண்டிய வயதெல்லைக்குட்பட்ட சிறுவர்களை, வீட்டு வேலைகள், கூலித் தொழில்கள் உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கும் அமர்த்துவோர் தொடர்பில் 1929 எனும் அவசர தொலைபேசி மூலம் அழைத்து தெரியப்படுத்தலாம் என, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அறிவித்துள்ளது.

# பொலிஸார் சுயாதீனமாகச் செயற்படுகிறார்கள்




சில சம்பவங்களின்போது பொலிஸார் பக்கச்சார்பாக செயற்படுவதாகக் காண்பிக்க முயற்சிக்கப்படுவதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பொலிஸார் தற்போதைய அரசாங்கத்தின் கீழ், சுயாதீனமாகச் செயற்படுகின்றனர் என்றார்.

சட்டம் நாட்டிலுள்ள அனைவருக்கும் பொதுவானது எனவும், பக்கச்சார்பாக செயற்படுவதற்கான தேவை பொலிஸாருக்கு இல்லை. அவ்வாறு எவரும் பொலிஸாருக்கு ஆலோசனைகளையும் வழங்குவதில்லை என்றார். சில சம்பவங்களில் பொலிஸார் பக்கச்சார்பாக செயற்படுவதாகக் காண்பிக்க முயற்சிக்கிறார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

சிறுவர் தொழிலாளர்களைத் தேடி மேல் மாகாணத்தில்

# விசேட தேடுதல்



கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட மேல் மாகாணங்களிலுள்ள வீடுகளில், வீட்டு வேலை செய்யும் சிறுவர் தொழிலாளர்களை கண்டறிய, விசேட சோதனை நடவடிக்கைகளை பொலிஸார் நேற்று (27) முதல் ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வீடுகளில் வேலை செய்வதற்கு, மலையகப் பகுதிகளில் இருந்து சிறுவர் தொழிலாளர்கள் அழைத்து வரப்படுவது, அண்மையில் இடம்பெற்ற சம்பவத்தினூடாக தெரியவந்துள்ளது. இவ்வாறு அழைத்து வரப்படும் சிறுவர்கள் மோசமாகவும் மனிதாபிமானமற்ற முறையிலும் நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சிறுவர்களை இவ்வாறு வீட்டு வேலைக்கு அழைத்து வரும் தரகர்கள், சிறுவர்களை வேலைக்கமர்த்தி மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவோருக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் கருவாடு காயவைக்கும் தொழில்களிலும் சிறுவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதுதொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இலங்கையின் அணுகுமுறை

# பலவேறு நாடுகளுக்கு உந்துசக்தியாக அமையும்



எதிர்காலச் சந்ததியினருக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்வதற்காக, சேதன விவசாயத்துக்கான இலங்கையின் அணுகுமுறை, மேலும் பல நாடுகளுக்கு உந்துசக்தியாக அமையுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

செப்டெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடருக்கான தளத்தை அமைக்கும் வகையில், இத்தாலியின் ரோம் நகரில் நேற்று முன்தினம் (26), ஐக்கிய நாடுகள் உணவு முறைமைகள் மாநாட்டின் முன் அமர்வு நிகழ்வு ஆரம்பமானது. இதன்போது, காணொளித் தொழில்நுட்பத்தின் ஊடாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உணவுக்கான உரிமை என்பது, ஓர் அடிப்படை மனித உரிமையாகும். தங்கள் மக்களுக்காக இந்த உரிமையைப் பாதுகாக்க அரசாங்கங்கள் தனித்தனியாகச் செயற்பட்டாலும், உலகளாவிய உணவு முறையின் சிக்கல்களைப் பற்றிய புரிதலை விரிவுபடுத்த வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

சேதன விவசாயம் என்பது, எமது நாட்டுக்குப் புதிதல்ல. புதிய அறிவியல் முன்னேற்றங்கள் மற்றும் முகாமைத்துவ நுட்பங்களுடன் இதில் புத்துயிர்ப்புப் பெற முயற்சிப்பதாகவும் இதன்போது தெரிவித்த அவர், உணவு முறைமையை மாற்றுவது, மனிதகுலத்தையும் நாம் வாழும் உலகையும் நிலைப்படுத்த நாம் கைக்கொள்ள வேண்டிய விடயங்களின் இன்றியமையாத பகுதியெனவும் தெரிவித்துள்ளார்.

மனிதகுலமானது, சமூக, அரசியல், பொருளாதார ரீதியாக வேறுபட்டிருந்தாலும், அது எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் அனைத்தும் பொதுவானதெனவும் தெரிவித்த அவர், இவற்றைத் தனியாக எதிர்கொள்ள முடியாது. இவற்றை வெற்றிகொள்ள வேண்டுமானால், கூட்டாகவே எதிர்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# கொஞ்சம் உதவி தேவை



படத்தில் இருக்கும் சிவப்பு நிற காற்சட்டை அணிந்த சிறுவனை இனங்கண்டால், அதுதொடர்பில் அறிவித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சமூக வலைத்தளங்களில் தகவல் பகிரப்பட்டு உள்ளது.

பகிரப்பட்டுள்ள அந்தத் தகவல்களின் பிரகாரம், படத்தில் இருக்கும் குறித்த சிறுவன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். வேலை ஒன்றுக்காக அழைப்பிக்கப்பட்டுள்ளார். எனினும், அழைத்தவர்கள் அச்சிறுவனை வந்து அழைத்துச் செல்லவில்லை. இதனால், கடந்த இரண்டு வாரங்களாக தனியாகத் தவித்து, வீதியோரங்களில் தூங்கியே இரவுகளைக் கழித்துள்ளார்.

இந்நிலையில், அவருடைய பணப்பை, தேசிய அடையாள அட்டை, அலைபேசி ஆகியவற்றை கொள்ளையர்கள் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர் என்றும் அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரசாங்கத்தின் தாக்குதலை முறியடிப்போம்



ஜோன் கொத்தலாவ பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தை அவ்வாறே தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல இடமளிக்க வேண்டுமென தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கம் கொண்டுவந்துள்ள சட்டமூலத்தைத் தோற்டிக்க ஐ.ம.ச முன்நிற்கும் எனவும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் இதுவரையில் நடத்திச் செல்லப்பட்ட வகையில் தொடர்ந்தும் அதனை நடத்திச் செல்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

அரசாங்கம் கொண்டு வந்துள்ள, ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலமானது, இலவச கல்வி மீது அரசாங்கம் முன்னெடுக்கும் பாரதூரமான தாக்குதல் எனவும், இந்தத் தாக்குதலை ஐக்கிய மக்கள் சக்தி தோற்கடிக்கும். வாய் சொல்லில் மாத்திரமல்லாது, நடைமுறையிலும் இச்சட்டமூலத்தை தோற்கடிக்க ஐக்கிய மக்கள் சக்தி முன்நிற்கும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# வைரவர் சிலையுடன் இருவர் கைது


■ க. அகரன்

பழைமை வாய்ந்த வைரவர் வடிவிலான சிலையை விற்பனை செய்ய முயன்ற இருவர், வவுனியா பிராந்திய போதைத் தடுப்பு பொலிஸாரால், நேற்று (27) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் ரோந்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், அவ்வழியே வந்த ஓட்டோ ஒன்றை வழிமறித்து சோதனை செய்தனர்.

இதன்போது, பெறுமதி வாய்ந்த வைரவர் சிலையொன்றை மீட்டதுடன், ஓட்டோவில் பயணித்த இரண்டு நபர்களையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்கள், குறித்த சிலையை விற்பனை செய்யும் நோக்கத்தில் வந்திருக்கலாம் என, பொலிஸாரால் சந்தேகிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்





அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும்

# கறுப்பு ஜூலை நினைவேந்தல் அனுஷ்டிப்பு

■ எஸ்.நிதர்ஷன், நடராசா கிருஸ்ணகுமார், எஸ். றொசேரியன் லெம்பேட், செ.கீதாஞ்சன்

இராணுவப் பிரசன்னம், புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வுகள், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில், நேற்று (27) காலை 9 மணிக்கு நடைபெற்றன.

தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வில், வெலிக்கடை சிறையில் 1983 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 53 அரசியல் கைதிகளுக்கும் அவ்வேளை, படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்குமாக இரண்டு நிமிடங்கள் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

"சுகாதார நடைமுறைகளுக்கு முழுமையாக மதிப்பளித்து நினைவேந்தலை நாம் செய்ய முற்பட்ட போது, காலையிலேயே பொலிஸார் எமது அலுவலகம் முன்பாக நோட்டமிட்டனர். அதுபோன்று இராணுவப் புலனாய்வாளர்கள் அலுவலக வாசலில் காத்து நின்றனர்" என, தவிசாளர் கூறினார்.

இதை அடுத்து, பல உறுப்பினர்கள் அச்சம் காரணமாக இந்நிகழ்வில் பங்கேற்கவில்லை.

இதேவேளை, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) அலுவலகங்களிலும், இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கையின்

# விவசாய சூழல் கட்டமைப்பு ஆராய்வு

## நிபுணர் குழுவை அழைத்துவரும் பவர்









இலங்கையின் விவசாய சூழல்கட்டமைப்பு தொடர்பில் ஆராய்வதற்காக, சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த புகழ்பெற்ற நிபுணர்கள் குழுவை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு, ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் (A. Baur & Co. (Pvt.) Ltd.) நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சேதன உரங்கள் தயாரிப்பு முறையை பின்பற்றுவதற்கு மாறிக் கொள்வதற்கும், அதற்கு அவசியமான விஞ்ஞான ரீதியான மற்றும் பிரயோக ரீதியான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஓகஸ்ட் 1ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், இந்த விஜயத்தின் போது சகல பிரதான பங்காளர்களுடனும் சந்திப்புகள், பரந்தளவு கலந்துரையாடல்கள், சேதன விவசாய நடவடிக்கைகளை தூண்டும் வசதிகள் மற்றும் களப் பகுதிகளுக்கு விஜயங்களை மேற்கொள்ளல் போன்றன மேற்கொள்ளப்படும். இதன்போது கொம்போஸ்ட் உரம் மற்றும் சேதனச் செய்கை தொடர்பான பயிற்சிகளையும் இந்த நிபுணர்கள் குழு வழங்கும்.

இரசாயன உரங்கள் மற்றும் களைநாசினிகள் இறக்குமதியை தடை செய்வதற்கு இலங்கை தீர்மானித்ததைத் தொடர்ந்து, உலகின் முன்னணி விவசாய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்களை பவர் ஆரம்பித்திருந்தது. இந்த சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு பயன்படுத்தக்கூடிய சிறந்த செயன்முறைகள் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல் போன்றன தொடர்பான நிபுணத்துவ உள்ளகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில், இந்தக் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தது.

சேதன விவசாயத்தில் உலகின் முன்னணி ஆய்வு மற்றும் அபிவிருத்தி அமைப்புகளாக கருதப்படும், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த சேதன விவசாய ஆய்வு நிறுவனம் (FiBL) மற்றும் பிரயோக விஞ்ஞானத்துக்கான பேர்ன் பல்கலைக்கழகத்தின் விவசாய, வனாந்தர மற்றும் உணவு விஞ்ஞானத்துக்கான கலாசாலை (HAFL) போன்றவற்றுடன் பவர் கைகோர்த்திருந்தது. FiBL மற்றும் HAFL ஆகியன துறைசார் தமது அறிவைப் பயன்படுத்தி, உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் கைகோர்த்துப் பணியாற்றும்.

சேதன விவசாயத்துக்கான இருப்பிடமாகத் திகழும் சுவிட்சர்லாந்து, உலகின் சேதன விவசாயத்தில் 6ஆவது அதியுயர் ஊடுருவலைக் கொண்டுள்ளது. விவசாய நிலத்தில் 16.5 சதவீதம் சேதன விவசாய நிலமாக அமைந்துள்ளது. சேதன உணவு நுகர்வில் இரண்டாவது உயர் தனிநபர் நுகர்வைக் கொண்டுள்ளதுடன், உலகளாவிய ரீதியில் 7ஆவது மாபெரும் சேதன சந்தையாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளது.

நிபுணத்துவ அணியினர், தமது கல்விசார் அனுபவத்தை மாத்திரம் இலங்கைக்கு கொண்டு வராமல், உலகளாவிய ரீதியில் பிரயோக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கொண்டுள்ள பெருமளவான அனுபவத்தை பகிர்ந்து கொள்ளும். FiBL மற்றும் HAFL ஐச் சேர்ந்த இந்த நிபுணர்கள் குழுவில் நான்கு சிரேஷ்ட அங்கத்தவர்கள் உள்ளடங்கியிருப்பர்.

பரிபூரண மற்றும் ஒன்றிணைந்த ஆய்வினைத் தொடர்ந்து, திரட்டப்படும் விஞ்ஞான ரீதியான மற்றும் நிபுணத்துவ ஆதாரங்களைக் கொண்டு இலங்கையின் சேதன விவசாயக் கொள்கைகளை பின்பற்றும் ஒன்றிணைந்த திட்டமொன்றை இந்த நிபுணர்கள் அணி தயாரிக்கும்.

படத்தில் உள்ளவர்கள்: இடமிருந்து - பேராசிரியர் கலாநிதி கிறிஸ்டோஃவ் ஸ்டுடர், போல் வன் டென் பேர்ஜ், கலாநிதி குர்பிர் எஸ் புல்லர் மற்றும் கலாநிதி ஜாக்ஸ் ஜி ஃபுச்ஸ்

# வெடிபொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் காயம்

■ சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு, சாலை பகுதியில், நேற்று (27) காலை, விறகு வெட்டிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர், வெடிபொருள் வெடித்ததில் படுகாயமடைந்துள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பலவன்பொக்கணை கிராம அலுவலர் பிரிவை சேர்ந்த 35 வயதுடைய குடும்பஸ்தரே, இவ்வாறு காயமடைந்துள்ளார்.

குறித்த நபர், தனது மனைவி, மகனுடன், சாலை பகுதியில் அமைந்திருக்கும் நீரேரிக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது, நீரேரிக்கு அருகில், மனைவியும் மகனும் உப்பு அள்ளிக் கொண்டிருந்த நிலையில், குறித்த நபர் அருகில் உள்ள பற்றைக்காடுகளில் விறகு வெட்டிக்கொண்டிருந்தார்.

மரத்தடியில் இருந்த வெடிபொருள் ஒன்று, கோடரி பட்டதில் வெடித்துள்ளது. காயமடைந்த குடும்பஸ்தர், மேலதிக சிகிச்சைகளுக்காக முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்


**அற்றோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்வதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை பிரசுரிப்பதற்கு**

கடவத்த, ரன்முது பெதச, இல. 172/20 என்ற முகவரியில் வசிக்கும் கதிமச்சாரிகே கெலும் குமார என்ற நான் கம்பஹா சட்டத்தரனி மற்றும் பிரசித்த நொத்தாரிசு கே.ஏ. தமரா அபேரத்ன அவர்களாள் 2021 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 66 என்ற பதிவாளர் நாயக திணைக்களத்தின் கம்பஹா வட்டார அலுவலகத்தில் எழுத்து மூலமாக மற்றும் அற்றோனித் தத்துவ ஆவணத்தில் 66 ஆம் அத்தியாயத்தில் 91 ஆம் பதிவேட்டில் 1599 ஆம் இலக்க தினக்குறிப்பேட்டிள் 2020.07.09 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டதுமான விஷேட அற்றோர்ணித் தத்துவம் மூலம் பதிவுசெய்யப்பட்டதுமான இபுல்கொட, அமுனுகொட, இல. 76/Q என்ற முகவரியில் வசிக்கும் ஹேரத் முதியன்சேலாகே நயனான்கனீ என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அடோர்னி தத்துவ அதிகாரத்தை இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டத் திகதியிலிருந்து அமுலுக்கு வரும்வகையில் இல்லாதொழித்து இரத்துச் செய்யப்படுகின்றது என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கத்திற்கும் அதன் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

ஹேரத் முதியன்சேலாகே நயனான்கனீ

**கம்பனியின் பெயர்மாற்றம் தொடர்பான பொது அறிவிப்பு**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2021 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு பெயர்மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**கம்பனியின் பழைய பெயர்**
மிம்சார்ச் (கரண்டி) லிமிட்டட்
**கம்பனியின் புதிய பெயர்**
பீ ஜே எ.்.ப் எம் குளோபல் (கரண்டி) லிமிட்டட்
**கம்பனியின் இல**
GL 2253
**பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி**
இல. 304/5,பார்க் வீதி,கொழும்பு 05.

**கம்பனி செயலாளர்கள்**
**கோபரேட் எட்வைசரி சேர்விசஸ் (பீவீஈ) எல்டீடி**

**கம்பனியின் பெயர்மாற்றம் தொடர்பான பொது அறிவிப்பு**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 2021 மே மாதம் 28 ஆம் திகதி கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு பெயர்மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**கம்பனியின் பழைய பெயர்**
.்.பான்கிளிப் புடிக் பனங்லோ (பிரைவட்) லிமிட்டட்
**கம்பனியின் புதிய பெயர்**
.்.பான்கிளிப் (பிரைவட்) லிமிட்டட்
**கம்பனியின் இல**
PV 72769
**பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி**
இல. 47/6, அலெக்ஸ்ஏன்ரா பிளேஸ், கொழும்பு 07.

**கம்பனி செயலாளர்கள்**
**கோபரேட் எட்வைசரி சேர்விசஸ் (பீவீஈ) எல்டீடி**

ஏறாவூர் நகர சபை நிர்வாகப் பிரிவில்

# 18 துணைச் சட்டங்களை உருவாக்கத் தீர்மானம்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

ஏறாவூர் நகர சபை நிர்வாகப் பிரிவில், நகர சபைக் கட்டளைச் சட்டம் 225இன் கீழ், 18 துணைச் சட்டங்களை உருவாக்குவதற்கு நகர சபை நிர்வாகம் தீர்மானித்திருப்பதாக, அந்நகர சபையின் செயலாளர் எம்.ஆர். ஷியாஹுல் ஹக் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபையின் மாதாந்த அமர்வு, சபைத் தலைவர் எம்.எஸ். நழிம் தலைமையில், நகர சபை சபா மண்டபத்தில் நேற்று (27) நடைபெற்றது.

இதன்போதே, துணைச் சட்டங்களை உருவாக்குவதற்கு



நகர சபை நிர்வாகம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

அதன்படி, நகர சபைப் பிரிவு வீதிகளில் காட்சி நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது பற்றிய துணை விதி, தங்குமிடங்கள் பொதுச் சுகாதார பாதுகாப்பு வசதிகளை முகாமைத்துவம் செய்தல்/ கட்டுப்படுத்துதல், உணவகங்கள் மற்றும் ஊறுவிளைவிக்கும் மற்றும் ஆபத்து மிக்க வியாபாரம் தொடர்பான துணைவிதி, தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் சிகை அலங்கார நிலையங்கள் தொடர்பான துணை விதி உள்ளிட்ட 18 துணைச் சட்டங்களை உருவாக்குவதற்கே ஆலோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளதாக ஏறாவூர் நகர சபைச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் சேர்க்கப்பட வேண்டிய பரிந்துரைகளோடு, தமது ஆலோசனைகளைச் சமர்ப்பிப்பதற்கும் ஏறாவூர் நகர உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

## தெரிவுசெய்யப்பட்ட போட்டியாளர்கள்





■ நூருல் ஹுதா உமர்

கல்முனை மாநகர சபை பிரதி மேயர் ரஹ்மத் மன்சூரின் வழிகாட்டலில், ரஹ்மத் பவுண்டேசனின் அனுசரணையில் ஸ்கை தமிழ் நடத்திய கட்டுரைப் போட்டியில், நாடளாவிய ரீதியில் 300க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இப்போட்டியில் சிறந்த கட்டுரையாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட 100 கட்டுரைப் போட்டியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, ரஹ்மத் சமூக சேவை அமைப்பின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (26) நடைபெற்றது.



பரீட்சை இரத்துக்கு காரணமான

# அதிகாரிகளை தண்டிக்கவும்

■ அஸ்லம் எஸ்.மௌலானா



கடந்த பெப்ரவரி மாதம் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் நியமனத்திற்கான போட்டிப் பரீட்சை, கிழக்கு மாகாண ஆளுநரால் இரத்துச் செய்யப்பட்டமைக்கு பாராட்டு தெரிவித்துள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளின் கிழக்கு மாகாண சங்கம், இப்பரீட்சை இரத்து செய்யப்படுமளவுக்கு முறைகேடுகளை மேற்கொண்ட அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனை வலியுறுத்தி, மேற்படி சங்கம் ஆளுநருக்கு கடிதம் அனுப்பி வைத்திருப்பதாக சங்கத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.முக்தார், நேற்று (27) தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; "பரீட்சையை இரத்துச் செய்து விட்டு, மீண்டுமொரு பரீட்சையை நடத்துவதுடன், இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடமுடியாது. மேற்படி பரீட்சையில் இடம்பெற்ற ஊழல், ஒழுங்கீனங்களுக்கு காரணமாக இருந்த அதிகாரிகள் யாராக இருந்தாலும் தகுதி, தராதரம் பாராது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்" என்றார்.

துப்பாக்கிச் சூடு விவகாரம்;

# மெய்ப்பாதுகாவலருக்கு விளக்கமறியல் நீடிப்பு

■ கனகராசா சரவணன்

இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனின் வீட்டுக்கு முன்னால் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மெய்ப்பாதுகாவலரின் விளக்கமறியல் உத்தரவை, எதிர்வரும் 9ஆம் திகதிவரை நீடித்து, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதியன்று நடத்தப்பட்ட இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் மகாலிங்கம் பாலசுந்தரம் (வயது 34) என்பவர் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட மெய்ப்பாதுகாவலர் விளக்கமறியலில் இருந்துவரும் நிலையில், நேற்று முன்தினம் (26) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.சி. எம். றிஸ்வான் முன்னிலையில், வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, கொரோனா தொற்று காரணமாக சந்தேகநபர், நீதிமன்றத்துக்கு அழைத்து வரமுடியாத நிலையில், இந்த வழக்கு விசாரணை காணொளி மூலமாக இடம்பெற்றது.



கடந்த வழக்கின் தவணையின் போது உயிரிழந்தவரின் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, இந்த வழக்கை மட்டக்களப்பு பொலிஸாரிடமிருந்து வேறு பிரிவுக்கு வழங்குமாறு, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், மட்டக்களப்பு பொலிஸாரிடமிருந்து வழக்கு மீளப்பெற்றிருந்த நிலையில், மாவட்ட குற்ற விசாரணை பிரிவுப் பொலிஸார் அந்த வழக்கை செய்ய முற்பட்டபோது, குறித்த வழக்கை வேறு பிரிவுக்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது.

எனவே, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு இந்த வழக்கு செய்ய பெருத்தமற்றது என பொலிஸாருக்கு அறிவுரை வழங்கிய நீதவான், மெய்ப்பாதுகாவலரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

இணையவழி ஊடான

# சர்வதேச ஆய்வரங்கு

■ எம்.எஸ்.எம். ஹனீபா, நூருள் ஹுதா உமர்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் இணையவழியூடான முதலாவது சர்வதேச ஆய்வரங்கு,'நிலைபேறான அபிவிருத்திக்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி தொழில்நுட்பம்' எனும் தொனிப்பொருளில், நேற்று (27) நடைபெற்றது.

தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் தலைமையில் நடைபெற்ற, ஆய்வரங்கில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எம்.எம். எம். நாஜிம் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இவ்வாய்வரங்கின் பிரதம பேச்சாளராக கலந்துகொண்ட மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கல்வி பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் அஜித் டி அல்விஸ் இணையவழியில் உரையாற்றினார்.

இவ்வாய்வரங்கில் சுமார் 50 ஆய்வுக் கட்டுரைகள் உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்களால் இணையவழியில் சமர்ப்பிக்கப்பட்டதாக, பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் தெரிவித்தார்.



நினைவேந்தலை நினைவுகூருவதைத் தடுக்க


# இராணுவம் கடும் பிரயத்தனம்

■ எம்.றொசாந்த், நடராசா கிருஸ்ணகுமார்

வெலிக்கடை சிறைப் படுகொலையை நினைவுகூர்ந்து சுவரொட்டிகளை ஒட்டுவதைத் தடுப்பதற்கு இராணுவத்தினர் கடும் அழுத்தங்களைப் பிரயோகித்தாகத் தெரிவித்த டெலோவின் மாவட்டப் பொறுப்பாளரும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளருமான தியாகராஜா நிரோஷ், ஏற்கெனவே தம்மால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளுக்கும் இனந்தெரியாதவர்கள் கழிவு எண்ணெயை பூசி வருவதாகவும் சாடினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், 1983ஆம் ஆண்டு, வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், வடக்கு, கிழக்கு முழுவதும், டெலோ சுவரொட்டிகளை ஒட்டி வருகிறது.

இந்நிலையில், நேற்றைய தினம் (27) அதிகாலை 12.30 மணியளவில், வலிகாமம் கிழக்கு - உரும்பிராய் பகுதியில், சுவரொட்டி ஒட்டுவதற்கு முயற்சித்த போது, உரும்பிராய் சந்தியில் கன்டர் வாகனத்தில் தரித்து நின்ற பெருமளவான இராணுவத்தினர், சுவரொட்டிகள் ஒட்டுவதைத் தடுத்தனர்.





பின்னர், என்னுடன் நின்றிருந்தவர்களின் கைளில் இருந்த சுவரொட்டிகளை இராணுவத்தினர் பறிக்க முயற்சித்தனர். இருப்பினும், சுவரொட்டிகளை நாம் வழங்கவில்லை.

இதனையடுத்து எமக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இராணுவத்தினர் எம்மை இப்பிரதேசத்தை விட்டு வெளியேறுமாறு கூறினர். எனினும், எமது பிரதேசத்தில் நடமாடுவதைதத் தடுக்க நீங்கள் யார் எனக் கேட்டேன். இதனைத் தொடர்ந்து ஒட்டப்பட்ட சுவரொட்டிகளை சுற்றிச் சுற்றி படம் எடுத்து, எங்கோ வட்சப் அனுப்பினர்.

பின்னர் உரும்பிராய் சந்தியில் இருந்து நாம் வெளியேறியவுடன் மோட்டர் சைக்கிளில் நான்கு இராணுவத்தினர் எனது வாகனத்துக்கு முன்னும் பின்னுமாக குறிப்பிட்ட தூரம் வரை பின்தொடர்ந்து விட்டு பின்வாங்கிச் சென்றனர்.

நாம் திரும்பி வரும் போது, வல்லைப் பகுதி, ஆவரங்கால், புத்தூர் என சகல இடங்களிலும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளுக்கு கழிவு எண்ணெய் பூசி மறைக்கப்பட்டிருந்ததுடன், சுவரொட்டிகள் அகற்ற கூடிய அளவுக்கு அகற்றப்பட்டிருந்தன.

வருடா வருடம் எமது கட்சி, எமது தலைவர்களை நினைவுகூர்ந்து வருகின்றது. ஆனால், இம்முறை நினைவுகூரலை தடுப்பதற்கு கடும் பிரயத்தனங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

கொலைச் சந்தேக நபர்

# 11 வருடங்களின் பின்னர் கைது

■ க. அகரன்

இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர், 11 வருடங்களின் பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பகுதியில், 2011ஆம் ஆண்டு கணவன், மனைவி கொலை செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் இருவர், அந்தக் காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்டு, வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ஆயினும், குறித்த இருவரும் நீதிமன்ற வழக்குத் தவணைகளில் ஆஜராகாமல் தலைமறைவாகியிருந்தனர்.

இந்நிலையில், அவர்களில் ஒருவர் 11 வருடங்களின் பின்னர் ஓமந்தை பொலிஸாரால், ஞாயிற்றுக்கிழமை (25) கைதுசெய்யப்பட்டார்.

## நீதி கோரும் ஆர்ப்பாட்டங்கள்...



பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த டயகமவைச் சேர்ந்த 16 வயது சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி, வடக்கின் பல பாகங்களில், நேற்றும் (27) ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.
(படப்பிடிப்பு: எம். றொசாந்த், விஜயரத்தினம் சரவணன், என். ராஜ், டி. விஜித்தா, சண்முகம் தவசீலன், செ. கீதாஞ்சன்)







சைக்கிளில் சென்றவர்

# திடீரென வீழ்ந்து மரணம்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை பகுதியில், நேற்று முன்தினம் (26), சைக்கிளில் சென்ற வயோதிபர் ஒருவர், திடீரென வீழ்ந்து மரணமடைந்துள்ளார்

முள்ளியவளை, மூன்றாம் வட்டாரத்தை சேர்ந்த 74 வயதுடைய நடராசா சிவராசா என்பவரே, இவ்வாறு மரணமடைந்துள்ளார்,

சடலம், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பி.சி.ஆர் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

# மரணம் சம்பவிக்கும் வரை காத்திருக்காதீர்கள்

## ஆரம்பத்திலேயே வெளிப்படுத்துங்கள்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

மரணம் சம்பவிக்கும் வரை காத்திருக்காமல், அதற்கு முன்னராக துஷ்பிரயோகங்கள் இடம்பெறுமிடத்தில் குற்றவாளிகளை சட்டத்தின் முன் உடனடியாகக் கொண்டு வருவதற்கு சகல மக்களும்




விழிப்புணர்வுடன் சட்டத்தை அணுக, முன்வர வேண்டும் என கிளிநொச்சி மாவட்டப் பெண்கள் வாழ்வுரிமைச்சங்க இணைப்பாளர் வாசுகி வள்ளிபுரம் தெரிவித்தார்.

அத்துடன், ரிஷாட் இல்லத்தில் தான் பாதிக்கப்பட்டமை தொடர்பில் வெளிப்படுத்திய சிறுமியோ அல்லது பெண்ணோ, ஆரம்ப கட்டத்திலேயே பாதிக்கப்பட்டமை தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தால், டயகம சிறுமியின் மரணம் மர்மமானதாக இருந்திருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

நன்பேரியல் தோட்ட மக்களுக்கு

# நிவாரணம் வழங்க நிர்வாகம் மறுப்பு

பலாங்கொடை - நன்பேரியல் தோட்டம், நெக்ரக் பிரிவு மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்காக சிவன் அருள் அமைப்பாள் அமைப்பினரால் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு, தோட்ட நிர்வாகம் அனுமதி மறுத்திருந்தது.

இந்நிலையில், இவ்விடயம் தொடர்பில், பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு சிவன் அருள் அமைப்பினர் கொண்டுவந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, குறித்த அமைப்புக்கு எவ்விதத் தடைகளுமின்றி நன்பேரியல் தோட்டத்துக்குச் சென்று உலர்வு உணவுப் பொருள்களை வழங்குவதற்கான அனுமதியை செந்தில் தொண்டமான் பெற்றுக்கொடுத்துள்ளார்.

ஒரு மாதத்துக்கு முன்னர், பலாங்கொடை பிளான்டேஷனுக்கு உட்பட்ட நன்பேரில் தோட்டம், நெக்ரக் பிரிவு மக்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்கான முயற்சிகளை பொகவந்தலாவ ராஹுல தேரர் தலைமையில், சிவன் அருள் அமைப்பினர் மேற்கொண்டனர்.



எனினும், தோட்ட நிர்வாகம் அவர்களுக்கு உலர் உணவு பொருள்களை வழங்குவதற்கான அனுமதியை மறுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் கவனத்துக்கு, பொகவந்தலாவ ராஹுல தேரர் கொண்டுசென்றதன் பின்னர், சப்ரகமுவ மாகாண ஆளுநர் தோட்ட நிர்வாகத்திடம் அத்தியாவசியப் பொருள்களை வழங்க அனுமதி வழங்குமாறு கோரியும் நிர்வாகத்தால் அனுமதி மறுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில், பலாங்கொடை பெருந்தோட்ட கம்பனியுடன் செந்தில் தொண்டமான் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் சமூக நலன்புரி அமைச்சின் பெருந்தோட்ட சமூக இணைப்பாளர் ரூபன் பெருமாளுடன், சிவன் அருள் அமைப்பினர் எவ்விதத் தடைகளுமின்றி, தோட்டத்தில் உலர் உணவு பொருள்களை மக்களுக்கு வழங்கிவைத்தனர்.

## சிறுமிக்கு அஞ்சலி....




■ பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்ட சர்வமத செயற்குழுவால், டயகம சிறுமிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வு, தலவாக்கலை கதிரேசன் கோவில் பிரதம குருக்கள் 'லங்கா தேசமானி' முத்துசாமி ஐயர் பிரசாந்த் சர்மா தலைமையில், தலவாக்கலை கதிரேசன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.







டயகம சிறுமிக்கு நீதி கோரும்

## ஆர்ப்பாட்டங்கள் நேற்றும் தொடர்ந்தன




■ மெய்யன், எம். கிருஸ்ணா

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வீட்டில் உயிரிழந்த டயகமயைச் சேர்ந்த சிறுமியின் மரணத்துக்கு நீதி கோரி, நேற்றும் சில இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதற்கமைய, பன்விலை, மடுல்கலை மாவுசா தோட்ட மக்களும் மடுல்கலை தோட்ட மக்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், நாவலப்பிட்டி பிரதேச மக்களால், நேற்று



(27) காலை 10 மணியளவில் ஜயதிலக மைத்தானத்துக்கு அருகில் எதிர்ப்புப் பேரணியும் முன்னெடுக்கப்பட்டு, நகர மத்தி வரை சென்றமை குறிப்பிடத்தக்கது.

## நுவரெலியாவில் ஞாயிறு ஆர்ப்பாட்டம்

### ஆசிரிய தொழிற்சங்கங்கள் முஸ்தீபு

■ சுஜிதா

நாடளாவிய ரீதியில் அதிபர், ஆசிரியர்கள் சம்பள முரண்பாடு உட்பட பல்வேறு வகையான பிரச்சினைகள் தொடர்பில், நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் இணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர்.

இதற்கமைய, ஓகஸ்ட் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நுவரெலியா மாநகரில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த, நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சகல அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஏகமனதானத் தீர்மானித்துள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் இயங்கும் எட்டு ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளும் ஹட்டனில் நேற்று முன்தினம் (26) ஒன்று கூடி, இத்தீர்மானத்தை எடுத்தனர்.

இதற்கமைய, ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு, நுவரெலியா- காமினி மத்திய கல்லூரிக்கு அருகாமையில் கல்வி சமூகத்தில் உள்ள சகலரும் ஒன்று திரளுமாறு, ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



## இறம்பொடையில் சிறுமியின் சடலம் மீட்பு

■ ஆ.ரமேஸ்

கொத்மலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இறம்பொடை மேல் கடைவீதி பகுதி வீடொன்றிலிருந்து 15 வயது சிறுமியொருவர், நேற்று முன்தினம் (26) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சிறுமி, அவரது தனி அறையிலிருந்தே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 04 மணியளவில் சிறுமி உயிரிழந்துள்ளமை தொடர்பில், சிறுமியின் வீட்டார், 119 அவசர பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்றதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

இதைனையடுத்து, சடலம் தொடர்பில் ஹல்பொடை நீதிமன்ற நீதவானின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு, மரண விசாரணையின் பின்னர் சடலம், நேற்று முன்தினம் மாலை நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சிறுமியின் மரணம் கொலையா, தற்கொலையா என்பது தொடர்பில் சட்ட வைத்தியர் ஊடான பிரேத பரிசோதணை நேற்று (27) காலை இடம்பெற்ற நிலையில், சிறுமியே அவரது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில், சிறுமியின் வீட்டார்களிடம் விசாரணைகளை நடத்துமாறு, ஹல்பொல் நீதவான் நீதிபதி கொத்மலை பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதுடன், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சட்ட குறைபாடுகளாலேயே

## சட்டவிரோத கட்டடங்கள்

### சட்டத்தைத் திருத்த முனைப்பு

■ சேஹ்ன் செனவிரத்ன

சட்டவிரோதக் கட்டடங்கள் அமைக்கப்படும் சந்தர்ப்பங்களில், நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்தில் காணப்படும் சில குறைபாடுகள் காரணமாக, அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு முடியாமல் போவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்நிலையில், மேற்படி சட்டத்தைத் திருத்துவது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளாரென, மத்திய மாகாண ஆளுநர் ல்லித் யூ.கமகே தெரிவித்துள்ளார்.

நேற்று (27) நடைபெற்ற கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கண்டி- குருநாகல் வீதியில் அமைக்கப்பட்ட நிலையில், தாழிறங்கிய கட்டடம் சட்டவிரோதமானது எனத் தெரிவித்த அவர், இதனால் குருநாகல் பிரதான வீதிக்கும் நீர், மின்சாரக் கட்டமைப்புகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கான நட்டஈட்டை குறித்த கட்டடத்தின் உரிமையாளரிடம் அறவிட வேண்டும்.

மேலும், சட்டவிரோதமாக அமைக்கும் கட்டடங்களுக்கு நீர், மின்சார இணைப்புகளை வழங்காதிருப்பது சிறந்தது என யோசனைகள் முன்வைக்கப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றாடலைப் பாதுகாக்க முன்வைத்த

## யோசனையை செயற்படுத்தவும்

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்டத்தில் இடம்பெறும் சுற்றாடல் பாதிப்பைத் தடுத்து, சுற்றாடலைப் பாதுகாப்பது தொடர்பான யோசனையொன்று முன்வைக்கப்பட்டு, பல மாதங்கள் கடந்துள்ள நிலையில், அந்த யோசனையை செயற்படுத்துவது குறித்து எவ்வித அறிகுறியும் காணப்படவில்லை என சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பின் உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு மற்றும் சுற்றாடல் குழுவிடம் இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாகவும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது மாவட்டம் முழுவதிலும் உள்ள சகல வனங்களையும் அரசாங்கம் பொறுப்பேற்று பாதுகாக்கப்பட்ட வனங்களாக அறிவித்தல், நீரேந்து பகுதிகளைப் பாதுகாத்தல்,கழிவு முகாமைத்துவம், நீர் முகாமைத்துவம், யானை- மனிதன் மோதல் உள்ளிட்ட பல சுற்றாடல் பிரச்சினைளகள் குறித்த யோசனைகள் முன்வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, முன்வைக்கப்பட்ட இந்த யோசனைகளை செயற்படுத்துவதற்கான திட்டங்களை மேற்கொள்வது அரசியல்வாதிகள், உயர் அரச அதிகாரிகளின் பொறுப்பும் கடமையும் என, சுற்றாடல் பாதுகாப்பு அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

## மீண்டும் திறக்கப்பட்ட பேர்னாட் பூங்கா

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாநகர சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் மாத்தளை, பேர்னாட் அலுவிஹார விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா என்பவற்றை, சுகாதார விதிமுறைகளின் கீழ், நேற்று (27) திறக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மாத்தளை நகர ஆணையாளர் யுரேஸ் நிஸாந்த மாதுவ தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவை பணிப்பாளரால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமைய, குறித்த 2 இடங்களையும்



திறந்துள்ளதுடன், மாத்தளை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள மக்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்காக இதனைத் திறக்கத் தீர்மானித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்சார

## பாவனையாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

### இரத்தினபுரியில் நடமாடும் சேவை

■ ஏ ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி மாவட்டத்தின் மின்சார பாவனையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க, இலங்கை மின்சார சபையின் துணையுடன், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு நடமாடும் சேவைகளை நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதற்கிணங்க, மின்மாணிகள், மின்சாரக் கம்பங்கள், மின்சாரக் கம்பிகள் மின்தூண்கள், மின்சாரப் பட்டியலில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள், மின் பாவனை அறவீடுகள், திடீர் மின் செயலிழப்பு போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து பாவனையாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுத் தரவுள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனவே, இவ்விடயம் தொடர்பில் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவும் பெயர்களைப் பதிவு செய்யவும் 0716329641 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு, பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர்.

இரத்தினக்கல் அகழ்வால்

## ஆபத்தை எதிர்நோக்கும் மவுண்ட்ஜீன் தோட்டம்

■ இரா.யோகேசன்

வட்டவளை, மவுண்ட்ஜீன் தோட்டத்தின் ஆற்றுப்பள்ளத்தாக்கில் இரத்தினக்கல் அகழ்வுக்கான ஆரம்ப கட்டப்பணிகளை, இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம் என்பன இணைந்து, ஆரம்பித்துள்ளமைக்கு, குறித்த தோட்ட மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இரத்தினக்கல் அகழ்ந்தால், இங்கு பாரிய சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுமென மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.





கடந்த காலங்களில் குறித்த இடத்தில் இரத்தினக்கற்கள் அகழப்பட்டதால், மண்சரிவு ஏற்பட்டமையே இம்மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றமைக்கு காரணமாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த ஆற்றில் இரத்தினக்கற்கள் அகழ்வு முன்னெடுக்கப்பட்டால், அதற்கு அண்மித்த பிரதான வீதி, வட்டவளை ரயில் நிலையத்தை அண்மித்த பகுதி என்பன தாழிறங்கும் அபாயம் உள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேபோல், கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் இரத்தினக்கற்கள் அகழ்வு முன்னெடுக்கப்பட்ட போது, சில அரசியல்வாதிகளின் தலையீட்டால் அது தடுத்து நிறுத்தப்பட்டதைப் போன்று, இம்முறையும் இந்த விடயம் குறித்து மலையக தொழிற்சங்கத் தலைவர்கள் தலையிட்டு, இதனைத் தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நிலத்துடன் நிற்காது நிர்வாகத்தின் அடிமடியிலும் கைவைப்பு

யுத்தமொன்று இல்லாமல் இருந்திருந்தால், சிங்கப்பூரைப் போன்று பல்துறைகளிலும் இலங்கை வளர்ச்சி அடைந்திருக்கும் எனப் பலரும் கூறுவார்கள். யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டு, 12 வருடங்கள் நிறைவடைந்தாலும், பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவே இல்லை.

சிறுபான்மையின மக்கள், பெரும்பான்மையாக வாழும் வடக்கு,கிழக்கு மாகாண நிலங்களைச் சூறையாடுதல், அடாத்தாகப் பிடித்தல், தொல்பொருள் திணைக்களத்துக்கு உரிமை கோருதல் என்று பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவற்றுக்கெல்லாம் ஒரு படி மேற்சென்று, வடக்கில் சிவில் நிர்வாகத்துக்குள் தமிழ் பேசமுடியாத பெரும்பான்மையினரை, வேண்டுமென்றே புகுத்தும் செயற்பாடுகள், துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இது, படிப்படியாக வளருமாயின் வடக்கின் சிவில் நிர்வாக கட்டமைப்பின் உயர்பதவிகளில் பெரும்பான்மையினரே நிரம்பியிருப்பர்.

95 சதவீதம் தமிழ் மக்களைக் கொண்ட வட மாகாணத்துக்கு, தமிழே தெரியாத பிரதம செயலாளராக சமன் பந்துலசேன, தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அவரைப் பௌத்த தேரர்களே புடைசூழ அழைத்துச் சென்று, பிரீத் ஓதி, கதிரையில் அமரச்செய்துள்ளனர். இதுவும் கூட, தென்னிலங்கைக்கு ஒரு செய்தியை சொல்லியிருக்கிறது.

பிரதம செயலாளருக்கு கீழே, தமிழ் தெரிந்தவர்கள், இன்றேல் தமிழும் ஆங்கிலமும் தெரிந்தவர்கள் நியமிக்கப்படலாம். ஆனால், தனக்குக் கீழிருப்பவர்கள், சிங்களம் தெரிந்தவர்களாக இருப்பார்களாயின் நிர்வாகம் செய்வது இலகுவாக இருக்குமென, நொண்டிச் சாட்டுகளைக் கூறி, கீழ்நிலை அதிகாரிகளாகத் தங்களுக்கு வேண்டியவர்களை நியமிப்பதற்கும் வழிசமைத்துக்கொள்ளக்கூடும்.

வடமாகாணத்துக்கான புதிய பிரதம செயலாளர் நியமனத்தை அரசாங்கம் நியாயப்படுத்தக்கூடும். ஆனால், ஆகக்குறைந்தது நிர்வகிக்கும் அதிகாரத்தை கூட, தமிழர்களுக்கு வழங்கிவிடக்கூடாது என்பதில், மிகவும் நிதானத்துடனும் இறுக்கமான மனப்பான்மையுடனும் இவ்வரசாங்கம் இருக்கிறதென்றால் அதில் தவறே இல்லை.

இவ்வாறானதொரு நிலையில், அரசியல் தீர்வு, சுயநிர்ணய உரிமை, முழுமையாக அதிகாரத்தை கொண்ட மாகாண சபை, அதற்குள் பொலிஸ், காணி அதிகாரங்கள் இவற்றையெல்லாம் எதிர்பார்ப்பது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகிவிடும்.

அதுமட்டுமன்றி யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபராகவும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரை நியமிப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவையெல்லாம், யுத்தமொன்று இல்லாமல் இருந்திருந்தால் இலங்கை, சிங்கப்பூராகி இருக்கும் என்ற கனவில், மண்ணை வாரியிறைக்கும் செயற்பாடுகளாகவே பார்க்கவேண்டியிருக்கிறது.

95 சதவீதம் தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்ற வடக்குக்கே இவ்வாறான நிலைமையெனில், ஏனைய மாகாணங்களைப் பற்றிப் பேசுவதில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை. அதற்காக, கைகளைக் கட்டிக்கொண்டும் வாய்களை மூடிக்கொண்டும் மௌனிகளாக இருந்துவிடக்கூடாது. எதிர்க்கவேண்டிய இடங்களில் எதிர்த்தும், நெளிவு சுழிவுகளுக்கு ஏற்ப பேரம் பேசியும் உரிமைகளை வென்றெடுக்கவேண்டும். விட்டுக்கொடுத்துக்கொண்டே போனால், எட்டிப்பிடிக்க முடியாமல் போய்விடும் என்பதை நினைவில் கொள்வோம்.

## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

விஞ்ஞானி அல்பிரட் நோபல் டைனமேட் வெடிபொருளைக் கண்டுபிடித்தார். இறுதியில் அதன் தாக்கத்தை நன்கு உணர்ந்து, தனது சொத்துகளை உலகுக்கு வழங்கிவிட்டார்.

அழிவுடன் நடக்கும் யுத்தம் கொடியது. இன்று அல்ல, முற்காலத்திலிருந்தே நடந்த யுத்தங்கள் அனேகமானவற்றுக்கு ஆணவமே காரணமாக இருந்தது.

யுத்தத்தில் தோற்ற நாடுகளின் போர் வீரர்கள் மட்டுமல்ல, ஒன்றுமே அறியாத மக்களின் உயிர்களும் காவு கொள்ளப்பட்டன. நாடும் பறிபோய், எல்லாமே இழந்தவர்கள் எதிலிகளாயினர். காலம் மாறியதும் வென்ற மன்னர்களும் ஏதோ ஒரு வழியில், அதே சண்டைகள் மூலம், வினைப்பயனால் அழிவது வரலாறு சொல்லும் கதைகள்.

ஆசையூடாக, வன்முறை, அவா என்பது கெட்டதும், அறத்துக்கு முரணானதும் எனத் தெரிந்தும் அதே படுகுழியில் போய் விழுவது நடந்து கொண்டேயிருந்தது.

அழிவுடன் காணும் வெற்றிவெறி நிரந்தரமன்று!

பருத்தியூர் பால வைரவநாதன்.

## கடிதங்கள்

முல்லைத்தீவு நகரச் சந்தைக்கு

### மீன்களை அதிகளவு கொண்டுவாருங்கள்

முல்லைத்தீவு நகரில் அமைந்திருக்கும் பொதுச் சந்தையில், மீன்களைக் கூடுதலாக விற்பனை செய்ய வேண்டும் என, பொது மக்களால் வேண்டுகோள் முன்வைக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு கடலில் பிடிக்கப்படும் மீன்கள், ஏற்றுமதி செய்யப்படுவதும் தீர்த்தக்கரை, சிலாபத்தை சந்தைகளில் கூடுதலாக விற்பனை செய்யப்படுவதும் முல்லைத்தீவு நகரச் சந்தையில் மிகக் குறைந்த அளவில் மீன் விற்பனை செய்யப்படுவதும், தற்போது நிகழ்ந்துவருகிறது.

இந்நிலையில், முல்லைத்தீவு கடலில் பிடிக்கப்படும் மீன்களை, முல்லைத்தீவு நகரச் சந்தையில் விற்பனை செய்வதன் மூலம், பெருமளவு மக்கள் பயன் பெறுவார்கள். முல்லைத்தீவு நகரத்துக்கு வரும் பொதுமக்கள், தீர்த்தக்கரை, சிலாபத்தை சந்தைகளுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது.

ஏற்றுமதியை மட்டும் இலக்காகக் கொண்ட மீன் கொள்வனவாளர்களால், முல்லைத்தீவு நகரச் சந்தைக்கு மீன்கள் கொண்டு வரப்படுவதில்லை. இதனாலேயே முல்லைத்தீவு நகரச் சந்தையில் மீன்களின் விற்பனை குறைவாகக் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம், முல்லைத்தீவு நகரச் சந்தைக்கு மீன்கள் கூடுதலாக வருவதற்கான பொறிமுறையை உருவாக்கி, முல்லைத்தீவு நகரச் சந்தையில் கூடுதலான மீன்கள் விற்பனை செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இதன் மூலம், மக்கள் பெருமளவு நன்மை அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நடராசா கிருஸ்ணகுமார்

சிறுவர் உழைப்பை ஒழிப்பதற்கான

# சர்வதேச வருடமும் ஹிஷாலினியும்



எம்.எஸ்.எம். ஐயூப்

முன்னாள் அமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீனின் பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள வீட்டில், பணிபுரிந்த 16 வயதுடைய ஹிஷாலினி எனும் சிறுமி, தீக்காயங்களுக்கு உள்ளாகி கடந்த 15 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். இந்தச் சிறுமி, நீண்ட காலமாக பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளதாகவும் மரண விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

ஒருபுறம், சிறுமி மண்ணெண்ணெய் ஊற்றி, எரித்துக் கொல்லப்பட்டதாகவும் ரிஷாட் வீட்டிலும் பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், சிறுமிக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்பட்டு இருக்கவில்லை என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

மறுபுறம், ரிஷாட்டின் வீட்டுக்கு, சிறுமி வருவதற்கு முன்னரே, பாலியல் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் சிறுமி தற்கொலை செய்து கொண்டதாகவும் கூறப்படுகிறது. இப்போது, இந்தச் சம்பவம் அரசியலாக்கப்பட்டு உள்ளதாலும் இன ரீதியாகப் பலர் அதற்கு விளக்கம் கொடுக்க முனைவதாலும் உண்மையை ஊகிக்க முடியாமல் இருக்கிறது.

தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறுவதைப் போல், இது இனப்பிரச்சினையோ அரசியல் பிரச்சினையோ அன்றி, சட்டம், ஒழுங்குப் பிரச்சினையாகும். எனவே, பொலிஸ் விசாரணை எவ்வித நெருக்குவாரமும் இல்லாமல் நடைபெற்றால் மட்டுமே உண்மையை அறியலாம்.

ஆளும் கூட்டணியின் அரசியல்வாதிகளும் அக்கூட்டணியை ஆதரிக்கும் ஊடகங்களும் நிலைமையைப் பாவித்து, அரசியல் இலாபம் தேட முயல்வது தெளிவாகத் தெரிகிறது. ஒரு புறம் அவர்கள், இந்தச் சம்பவத்தைப் பாவித்து, தமக்கு எதிராக இணைந்திருக்கும் தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரிக்க முற்படுகிறார்கள்.

மறுபுறம், 2018ஆம் ஆண்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்த ராஜபக்‌ஷவைப் பிரதமராக நியமித்தபோது, அந்த அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குமாறு கேட்டும், அதற்கு ரிஷாட் உடன்படாததால் அதற்காக அவரைப் பழிவாங்க, இந்தச் சம்பவத்தையும் பாவிக்கிறார்கள். அதுமட்டும் அல்லாமல், உயிரிழந்த சிறுமிக்கு நியாயம் தேடி, ஆளும் கட்சியினர் போராடவில்லை என்றே ஊகிக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், இந்தச் சம்பவம் ரிஷாட்டின் வீட்டில் இடம்பெற்றதை எவரும் மறுக்கவில்லை. எனவே, உண்மையிலேயே என்ன நடந்தது என்பதை ஆதாரபூர்வமாக விளக்கும் பொறுப்பை, அவரது குடும்பத்தினர் ஏற்றே ஆக வேண்டும்.

முக்கியமான பிரச்சினை என்னவென்றால், இதையொரு தனிச் சம்பவமாகப் பார்க்க முடியாது. இது, இந்நாட்டு ஏழைகள், குறிப்பாக மலையகத் தமிழர்கள் எதிர்நோக்கி இருக்கும் பாரியதொரு பிரச்சினையின் வெளிப்பாடாகும்.

அந்தப் பாரிய பிரச்சினையை ஆராய முற்பட்டால், ஹிஷாலினியின் பிரச்சினை அதற்குள் மூடி மறைந்து, அதன் பாரதூரத்தன்மையைக் குறைத்து விடும் அபாயம் இருக்கிறது. எனினும், இந்தத் தனிச் சம்பவத்தின் ஊடாக, ஒரு சமூகமே எதிர்நோக்கியிருக்கும் பாரியதொரு சமூகப் பிரச்சினையையும் புறக்கணிக்க முடியாது.

2009ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதியும், இதுபோன்ற கவலைக்குரிய சம்பவம் இடம்பெற்றது. பௌத்தாலோக்க மாவத்தையில், பெரும் தனவந்தர்களின் இரண்டு வீடுகளில் வேலை செய்து வந்த மஸ்கெலியாவைச் சேர்ந்த இரண்டு தமிழ்ச் சிறுமிகள், அருகில் ஓடும் டொரிங்டன் ஓடையில் மிதந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டனர். அவர்கள், மதுவீரன் ஜீவராணி (வயது 13), லக்‌ஷமகன் சுமதி (வயது 16) ஆவர்.

அவர்கள், தற்கொலை செய்து கொள்வதாகக் கடிதம் எழுதி வைத்திருந்ததாகப் பொலிஸார் கூறினர். ஆனால், அந்தக் கடிதத்தில் காணப்பட்ட கையெழுத்து, தமது மகளின் கையெழுத்தல்ல என, இரண்டு சிறுமிகளினது பெற்றோரும் தெரிவித்து இருந்தனர். அதேவேளை, அவர்கள் குதித்து தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்பட்ட ஓடையில், அவர்கள் மூழ்கும் அளவுக்குத் தண்ணீர் இருக்கவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டி இருந்தனர். ஆனால், பொலிஸார் அந்த மரணங்களைத் தற்கொலையாகவே நீதிமன்றத்தில் எடுத்துரைத்தனர்.

அது, மஹிந்த ராஜபக்‌ஷ ஜனாதிபதியாக இருந்த காலம். இன்றைய ஆளும் கட்சியினரே, அன்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் ஆட்சி செய்தனர். அப்போது, அந்த இரு சிறுமிகளுக்காக அவர்கள் பரிந்து பேசவில்லை. அச்சிறுமிகளின் வயதைக் கவனித்தாவது, அவர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவில்லை. பிரச்சினை, இனரீதியாகவே அப்போது பார்க்கப்பட்டது. எனவேதான், இப்போது ஆளும் கூட்டணியின் அரசியல்வாதிகள் அரசியல் இலாபம் தேடுகிறார்கள் என்று முடிவு செய்ய வேண்டியுள்ளது.

சிங்களவர், தமிழர், முஸ்லிம், மலையகத்தவர் என்றிருக்கும் சகல தனவந்தர்களினது வீடுகளிலும் வேலையாட்கள் இருக்கிறார்கள். அவர்கள் எந்தவொரு தொழில் சட்டத்துக்கும் உட்படாதவர்கள். எனவே, அவர்கள் மிகக்குறைந்த சம்பளத்திலும் எத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்ற வரையறை இல்லாமலும் வேலை செய்கிறார்கள். சில வீடுகளில், 12, 13 வயது சிறுவர்கள் - பெரும்பாலும் சிறுமிகள், 20 மணித்தியாலங்கள் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு விடுமுறை இல்லை; வெளியே செல்லும் உரிமை இல்லை; தொழில் உத்தரவாதமும் இல்லை; எந்நேரமும் அவர்கள் பணியிலிருந்து நீக்கப்படலாம்.

பெரும்பாலும் பெண்களே, வீட்டு வேலைக்குச் சேர்க்கப்படுகிறார்கள். அதிலும், சிறுவர்களை வேலை வழங்குநர்கள் அதிகம் விரும்புகிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்துவது இலகுவாக இருப்பதே அதற்குக் காரணமாகும். அவர்கள் தப்பிச் செல்ல முயல்வதும் குறைவு. இதே பலவீனங்கள் காரணமாக, அவர்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகமாக இருக்கிறது.

குடும்பத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாகவும் முறையிட்டால் மேலும் தண்டிக்கப்படுவோமோ என்ற அச்சத்தாலும் பெரும்பாலான வேலையாட்கள், இம்சைகளைப் பொறுத்துக் கொண்டு வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

பல தலைமுறையாக, இந்தப் பிரச்சினை இருந்து வந்த போதிலும் இது சகலரும் அறிந்த பகிரங்க இரகசியமாக இருந்த போதிலும், எந்தவோர் அரசாங்கமும் இதற்குத் தீர்வு காண முற்படவில்லை. அரசியல்வாதிகளும் இந்தச் சுரண்டலில் ஈடுபடுவதால், அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்று நம்பவும் முடியாது.

உலகம் முழுவதிலும் சுமார் 67 மில்லியன் வீட்டு வேலையாட்கள் இருப்பதாக, உலக தொழிலாளர் அமைப்பு (ILO) கூறுகிறது. உலகில் பணி புரியும் பெண்களில், நான்கு சதவீதமானவர்கள் வீட்டுப் பணிப்பெண்களாகவே இருக்கினறனர்.

இலங்கையில், வீட்டுப் பணியாளர்கள் குறித்து, நூற்றுக்கணக்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் எந்தவோர் அமைப்பும் வீட்டுப் பணிப்பெண்களினதும் சிறுவர் பணியாளர்களினதும் எண்ணிக்கையைக் கண்டறியவில்லை. எனவே, வேலைக்கு அமர்த்தப்பட்ட சிறுவர்களைப் பற்றிய சரியான தரவுகளும் இல்லை. இந்த விடயத்தில், மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மலையக மக்கள் தொடர்பாக, அவர்களது தலைவர்களாவது முறையாக ஆராய்ந்து, அறிக்கை தயாரித்துள்ளார்களா என்பது தெரியவில்லை.

மேற்படி, மஸ்கெலியா சிறுமிகள் கொல்லப்பட்ட நாள்களில், அவர்களது தோட்டத்தில் ஆய்வொன்றை நடத்திய, கண்டியைத் தளமாகக் கொண்ட மனித அபிவிருத்தி அமைப்பு (HDO), அந்தத் தோட்டத்திலிருந்து மட்டும் சுமார் 30 சிறுவர்கள் வேலைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தது.

இந்த விடயத்தில், சர்வதேச நிறுவனங்களோ அல்லது, இலங்கையில் அரச நிறுவனங்களோ நேர்மையாக நடந்து கொள்கிறார்களா என்பது சந்தேகத்துக்குரியது.

பல நூற்றாண்டுகளாக, வீட்டுப் பணியாளர்களின் பிரச்சினை இருந்து வந்துள்ள போதிலும், கடந்த பல தசாப்தங்களாக அது சர்வதேச அரங்குகளில் பேசுபொருளாக இருந்து வந்துள்ள போதிலும், 2019 ஆம் ஆண்டுதான் அதைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, சிறுவர் உழைப்பை ஒழிப்பதற்கான சர்வதேச வருடம் பிரகடனப்படுத்தப்பட்டது. அந்த சிறுவர் உழைப்பை ஒழிப்பதற்கான சர்வதேச வருடத்தில் (2021) தான் ஹிஷாலினிக்கு இந்தக் கதி நடந்துள்ளது.

2010ஆம் ஆண்டு, நெதர்லாந்தில் ஹேக் நகரில் சிறுவர் உழைப்பு தொடர்பான சர்வதேச மாநாடு நடைபெற்றது. அதன் விளைவாக இலங்கையிலும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை தடுக்கும் நோக்கத்துடன் சிறுவர் உழைப்பை ஒழிப்பதற்கான செலாற்றுக் குழு நியமிக்கப்பட்டது. 10 ஆண்டுகளுக்குப் பின்னர், 2020ஆம் ஆண்டுதான் அந்தக் குழு, தமது நோக்கத்தை அடைவதற்கான திட்டத்தை வகுப்பதற்காக தொழில்நுட்பக் குழுவை நியமித்தது. அந்தக் குழு, 2020 டிசெம்பர் மாதம், அதாவது, ஹேக் மாநாடு நடைபெற்று 10 ஆண்டுகளுக்குப் பின்னர், இலங்கையில் சிறுவர் வேலையாட்களைப் பற்றிய நிலைமையை மதிப்பிடுவதென முடிவு செய்தது.

2025ஆம் ஆண்டு, இலங்கையில் சிறுவர் உழைப்பை ஒழிப்பதாக இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் வாக்குறுதி அளித்துள்ளது. எனினும், இவர்களது இந்த வேகத்தைப் பார்த்தால், இலங்கையில் சிறுவர் உழைப்பைச் சுரண்டுவதை நிறுத்த, இலங்கை ஆட்சியாளர்கள் நேர்மையாக நடவடிக்கை எடுப்பார்களா என்ற கேள்வி எழுகிறது.

இந்தியா

பெகாஸஸ் விவகாரம்;

# அமளியை அடுத்து மாநிலங்களவை ஒத்திவைப்பு

மாநிலங்களவையில் பெகாஸஸ் விவகாரம் தொடர்பாக விவாதிக்க வேண்டுமென எதிர்க்கட்சிகளின் தொடர் அமளியை அடுத்து, பிற்பகல் 2 மணி வரை நேற்று (27) அவை ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் ஜூலை 19ஆம் திகதி தொடங்கி நடைபெற்று வருகிறது. ஒகஸ்ட் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த கூட்டத்தொடரில், பல்வேறு சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. இந்நிலையில், பெகாஸஸ் விவகாரம் தொடர்பாக விவாதிக்க வேண்டும் என, கூட்டத்தின் முதல் நாளிலிருந்தே எதிர்க்கட்சிகள் இரு அவைகளிலும் அமளியில் ஈடுபட்டு வருகின்றன. நேற்று மாநிலங்களவையில் பெகாஸஸ் விவகாரம் தொடர்பாக விவாதிக்க வேண்டுமென எதிர்க்கட்சிகளின் தொடர் அமளியை அடுத்து, பிற்பகல் 2 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது. முன்னதாக, நேற்று மதியம் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் விவாதம் தொடங்கிய நிலையில் எதிர்க்கட்சிகள் அமளியால் மீண்டும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டிருந்தது. பெகாஸஸ் விவகாரத்தால் தொடர்ந்து பாராளுமன்றம் முடங்கி வருவது குறிப்பிடத்தக்கது.



அருப்புக்கோட்டை

## வாய்த்தகராறு கொலையில் முடிந்தது



விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே பரளச்சியை கிராமத்தில் மனநிலை பாதிக்கப்பட்ட, பெண் தாக்கியதில் மற்றொரு பெண்ணின் தலையில் பாரிய காயம் ஏற்பட்டு பலியான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

54 வயதுடைய பெண் திருமணமாகாதவர். இவர், பால்வாடியில் ஆயாவாக வேலை செய்துவருகிறார். இவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகச் சென்றபோது, அம்மருத்துவமனையில் பூலாங்காலைச் சேர்ந்த மனநிலை பாதிக்கப்பட்ட பெண்ணுடன் வாய்த்தகராறு ஏற்பட்டது.

மருத்துவம் பார்த்த பின்னர், தனது ஊருக்கு வந்த அப்பெண், வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டவரின் வீட்டிற்கே சென்று மீண்டும் வாய்த் தகராறில் ஈடுபட்டார். இதில் ஆத்திரமடைந்த அந்தப்பெண், சட்டென கையில் கிடைத்த பொருளைக்கொண்டு தலையில் பலமாகத் தாக்கித் தள்ளிவிட்டதாகக் கூறப்படுகிறது. இதில் மயங்கி விழுந்த பெண்ணை, அக்கம்பக்கத்தார் மருத்துவமனையில் சேர்த்தபோது, அவர் ஏற்கெனவே இறந்து விட்டதாக மருத்துவர்கள் கூறினர்.

புதுடெல்லி

## பா.ஜ.க எம்.பிக்கள் அம்பலப்படுத்த வேண்டும்

பாராளுமன்றத்தை முடக்கும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சிகளின் செயற்பாடுகளை, மக்களிடம் பாரதிய ஜனதா கட்சி எம்.பிக்கள் அம்பலப்படுத்த வேண்டும் என பிரதமர் மோடி வலியுறுத்தினார்.




பிரான்ஸைச் சேர்ந்த இலாப நோக்கமற்ற அமைப்பான ஃபர்பிடன் ஸ்டோரிஸ், அம்னெஸ்டி இன்டர்நேஷனல் ஆகியவை இணைந்து புலனாய்வு செய்து ஒட்டுக் கேட்டைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதில் இஸ்ரேலின் என்எஸ்ஓ அமைப்பின் பெகாசஸ் உளவு மென்பொருள் மூலம் இந்தியாவில் 40 பத்திரிகையாளர்கள், மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட பலரின் அலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டதாகத் தகவல் வெளியானது. சர்வதேச அளவில் தி நியூயார்க் டைம்ஸ், கார்டியன், லீ மாண்டே ஆகிய நாளேடுகள் வெளியிட்டுள்ளன.

நாட்டையே உலுக்கியுள்ள இந்த பெகாசஸ் ஒட்டுகேட்பு விவகாரம் தொடர்பாக பாராளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்தக் கோரி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வருகின்றன.

புதுடெல்லி

குஜராத் கொலை;

## நேரில் கண்டால் தான் உண்மையா?

கொலை வழக்கு உள்ளிட்ட குற்றங்களில் நேரில் பார்த்த சாட்சியே மிகவும் சிறந்த சாட்சியாக இருக்கும் என, கொலை வழக்கு ஒன்றில் அளித்த தீர்ப்பில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

குஜராத்தில் நடந்த கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு பேருக்கு கீழ் நீதிமன்றம் அளித்த ஆயுள் தண்டனையை குஜராத் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த நீதிபதிகள் இருவர் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு, தன் தீர்ப்பில் கூறியுள்ளதாவது: நம் நீதிமன்ற விசாரணையில் எப்போதும் நேரில் பார்த்த சாட்சிகளுக்கே முக்கியத்துவம் தரப்படும். மருத்துவ பரிசோதனை முடிவுகளுக்கு நேர் எதிராக இருந்தால் மட்டுமே நேரடி சாட்சி குறித்து சந்தேகம் ஏற்படும். அதன்படி, ஆயுள் தண்டனை உறுதி செய்யப்படுகிறது என அமர்வு தீர்ப்பளித்தது.



இராமேஸ்வரம்

அப்துல் கலாமின் நினைவு தினம்;

## கூட்டுக் குடும்பத்தை விரும்பியவர் கலாம்



தாத்தா அப்துல் கலாம் எப்போதுமே கூட்டுக்குடும்பமாக இருக்க வேண்டும் என்பதையே விரும்பினார் என அப்துல் கலாமின் சகோதரரின் பேரன் அவரது நினைவு தினம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே தெரிவித்துள்ளார்.

ஆசிரியராகவும் பாதுகாப்புத் துறையில் பணியாற்றிய போதும், ஜனாதிபதியாக இருந்த போதும் கூட ஒவ்வொரு முறையும் ராமேஸ்வரம் வந்த போதும், குடும்பத்தில் உள்ள அனைவரையும் ஒன்று சேர்ந்து பார்த்துப் பேசுவதில்தான் அதிக மகிழ்ச்சி கொண்டார்.

அதனால், அவர் ராமேஸ்வரத்துக்கு வந்தபோதெல்லாம் பாம்பன், தங்கச்சிமடம், ராமேஸ்வரம் பகுதியில் உள்ள குடும்பத்தினர் அனைவரும் அன்று வீட்டில் கூட்டுக் குடும்பமாகவே இருந்து அவரை வரவேற்போம். அது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்தது.

என்னிடம் புத்தகம் படிப்பதில் அதிக ஆர்வத்துடன் இருக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்தியா முழுவதும் உள்ள அனைத்து கிராமங்களிலும் உள்ள மக்களுக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்பதே அவரது ஆசையாக இருந்தது. இவ்வாறு, அப்துல் கலாம் குறித்து அவருடைய அண்ணன் முஹம்மது முத்து மீரான் லெப்பை மரைக்காயரின் பேரன் சேக்தாவூது கூறியுள்ளார்.

புதுடெல்லி

இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி விவகாரம்;

## அறிக்கையின் படி விசாரணைக்கு உத்தரவு



இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி நம்பி நாராயணன் மீது உளவு பார்த்ததாக பொய் வழக்கு தொடர்ந்த பொலிஸ் அதிகாரிகள் மீதான வழக்கில், விசாரணை அறிக்கையை விசாரித்து நடவடிக்கை எடுக்கும்படி சி.பி.ஐ.,க்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் 1994ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ அலுவலகம் அருகே ரொக்கெட் தொடர்பான முக்கிய ஆவணங்களுடன் மாலைதீவைச் சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார். பாகிஸ்தானுக்காக உளவு பார்த்ததாக இஸ்ரோவில் இயக்குநராக பணியாற்றி வந்த நம்பி நாராயணன் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டனர்.

சி.பி.ஐ நடத்திய விசாரணையில் உளவு பார்த்த விவகாரத்தில் நம்பி நாராயணன் உள்ளிட்டோருக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பது தெரியவந்தது. மூத்த பொலிஸ் அதிகாரிகள் சிலர் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி பொய் வழக்கு தொடர்ந்ததாகவும், விசாரணையில் தெரிய வந்தது.



டயகம சிறுமி வழக்கின் சாரம்சம்:

# மண்ணெண்ணெய் போத்தல் நடந்து சென்றது எப்படி?

- 11 நிமிடங்களில் சென்றிருக்கலாம் 2 மணிநேரம் தாமதித்து ஏன்?
- சிறுமியின் சகோதரனுக்கு 50 ஆயிரம் ரூபாய் கொடுத்தவர் யார்?
- சிறுமியின் பெயரை சிங்களத்தில் மாற்றிக் கொடுத்த மாமா
- மண்ணெண்ணெய் குறித்த மாமி, சாரதியின் வாக்குமூலங்கள் முரணானது

வீட்டுப் பணிப்பெண்ணாக சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்த நிலையில், எரிகாயங்களுடன் மரணமடைந்த தலவாக்கலை- டயகமவைச் சேர்ந்த 16 வயதான சிறுமி தொடர்பிலான வழக்கு, நேற்று முன்தினம் (26) விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

இதன்போது, முறைப்பாட்டாளர் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனை, இந்த வழக்கிலும் சந்தேகநபராக பெயர் குறிப்பிட்டார்.

வழக்கு, கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரியவின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட போது, பிரதி சொலிஸிட்ட ஜெனரலால் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட வாதத்தையும் மேலதிக நீதவானின் கட்டளைகள், உத்தரவுகளை, சுருக்கி, சராம்சத்தை மட்டுமே இங்கு தருகின்றோம்.

- பௌத்தாலோக்க மாவத்தையிலுள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டுக்கு அச்சிறுமி, ரிஷாட்டின் அறிவுறுத்தலுக்கு அமையவே சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். ஆகையால், அவரையும் (ரிஷாட்டை) சந்தேக நபராகப் பெயர் குறிப்பிட்டுள்ளேன்.
- மற்றுமொரு சம்பவம் தொடர்பில் ரிஷாட், தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றார். ஆகையால், அந்த விசாரணையின் நிறைவில், இந்த வழக்குக்காக, நீதிமன்றத்தில் ரிஷாட்டை ஆஜர்படுத்துவோம்.
- சிறுமியின் சடலத்தை மீளவும் தோண்டியெடுத்து, சிரேஷ்ட நீதிமன்ற வைத்திய அதிகாரி தலைமையிலான குழு முன்னிலையில், மீண்டும் மரண பரிசோதனை செய்ய, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்துக்கு மேலதிக நீதவான் கட்டளையிட்டார்.
- ஜூலை 3ஆம் திகதி மாலை 6.45க்கு தீப்பற்றிக்கொண்டது. எனினும், இரவு 8.30க்கே சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இரண்டு மணிநேரம் சிகிச்சையளிக்காமை சந்தேகம்.
- அமைச்சரின் வீட்டில் பொலிஸ் சீருடையில் இருந்தவர், சிறுமியின் சகோதரருக்கு அழைப்பை எடுத்து, "இந்த விவகாரத்தை இலகுவில் முடித்துக்கொள்வோம்" எனக் கூறியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
- ரிஷாட்டின் மாமாவே அச்சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். பெயர், வயது உள்ளிட்ட சகல விவரங்களையும் போலியாகக் கொடுத்துள்ளமை பெரும் சந்தேகம்.
- மண்ணெண்ணெய் போன்ற திரவியம் அடங்கிய ப்ளாஸ்டிக் போத்தல் ஒன்றும் தலையணைக்கு கீழிருந்து மஞ்சள் நிற லைட்டரும் கைப்பற்றப்பட்டுள்ளன.
- இதற்கு முன்னர் பணியாற்றியவர்களின் வாக்குமூலங்களில் பிரகாரம், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மண்ணெண்ணெய், லைட்டர் அந்த வீட்டில் பயன்படுத்தவில்லை. தீ அவசியமாயின் சமையலறைக்குச் சென்று கேஸ் அடுப்பிலேயே பற்றவைப்பதாகத் தெரிவித்துள்ளனர்.
- வீட்டில் பணியாற்றிய சாரதியே இன்றைக்கு ஒன்றரை வருடங்களுக்கு முன்னர், மண்ணெண்ணெய் கொண்டுவந்தார் என அமைச்சரின் மாமி கூறியுள்ளார்.
- ஆனால், தான் அப்படி எதையும் வாங்கி வரவில்லையென சாரதி வாக்குமூலம் அளித்துள்ளார்.
- 1990 அம்புலன்ஸ் வரும் வரையிலும் வீட்டின் முன்பாக உள்ள நீர்த் தொட்டியில் இரண்டு மணிநேரம் சிறுமியை அமிழ்த்தி வைத்திருந்துள்ளனர். முன்னாள் அமைச்சரின் வீட்டில் வாகனம் இல்லையா?
- ரிஷாட்டுக்கு 16 வயதில் மகள் ஒருவரும் இருக்கிறார். அவ்வீட்டில் ஏதாவது தீ அனர்த்தங்கள் ஏற்பட்டிருக்குமாயின், 1990 அம்புலன்ஸ் வரும் வரையிலும் காத்திருப்பார்களா?
- வீட்டிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 11 நிமிடங்களில் பயணிக்கலாம். 2 மணிநேரம் தாமதித்தது ஏன்?
- பௌத்தலோக்க மாவத்தையில் ரிஷாட் பதியுதீனுக்கு இரண்டு வீடுகள் உள்ளன. சாரதிகள் இருவரும் அந்நேரத்தில் இருந்துள்ளனர். வாகனங்கள் இரண்டும் வீட்டில் இருந்துள்ளன. அப்படியாயின் 2 மணிநேரம் தாமதித்தது ஏன்?
- சிறுமியின் பெயரை 'இஷனி' என்ற சிங்களப் பெயராகவும் வயதை 18ஆகவும் மாற்றிக் கொடுத்துள்ளமை ஏன்?
- வீட்டாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் வந்தும் சிறுமியைப் பார்க்கமுடியவில்லை. ரிஷாட்டின் வீட்டுக்குச் செல்கின்றனர். அங்கு, பொலிஸ் சீருடையில் இருந்த ஒருவர், "பொலிஸூக்குப் போகவேண்டியதில்லை; இவ்விடத்திலேயே முடித்துக்கொள்வோம்" என சிறுமியின் சகோதரனிடம் தெரிவித்துள்ளார்.
- ரிஷாட்டின் செயலாளர் எனக் கூறப்படுபவர், மலர்சாலையில் வேலை செய்பவர் எனத் தன்னை அறிமுகப்படுத்தி, சிறுமியின் சகோதரனிடம் 50 ஆயிரம் ரூபாயை கொடுத்துள்ளார்.
- தன்னுடைய தங்கை எரியுண்டதாகக் கூறப்படும் அந்த அறையை சகோதரன் பார்த்தபோது, மண்ணெண்ணெய் போத்தல் கதவுக்கு அருகில் இருந்துள்ளது. பொரளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி போகும் போது, கட்டிலின் மேல் அந்தப் போத்தல் இருந்துள்ளது. 'சொக்கோ' அதிகாரிகள் (பொலிஸ் தடயவியல் அதிகாரிகள்) செல்கையில், அதே போத்தல் நாற்காலியின் மேல் இருந்துள்ளது.
- நான்காவது சந்தேகநபரான ரிஷாட்டின் மாமனார், அவ்வீட்டில் பணியாற்றிய இரண்டு பணிப்பெண்களை வன்புணர்ந்துள்ளார்.
- சந்தேகநபர்களுக்கு பிணை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும், சாட்சிகளை அச்சுறுத்தக் கூடும் என்ற காரணத்தால், அவர்களுக்குப் பிணை வழங்கவேண்டாமென பிரதி சொலிஸிட்டர் ஜெனரல், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.
- அந்த வீட்டிலுள்ள 8 சி.சி.டி.வி கமெராக்களில் ஏப்ரல் மாதத்தில் இருந்து பதிவுகளைப் பெறுவதற்கு பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதியளித்ததுடன், சந்தேகநபர்களை, எதிர்வரும் 9ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஐ. அமெரிக்கா

### இவ்வாண்டு இறுதியில் ஈராக்கிலிருந்து

# படைகள் வெளியேறும்

## அமெரிக்க ஜனாதிபதி அறிவிப்பு

ஈராக்கில் இவ்வாண்டு இறுதியுடன் தமது சண்டை நடவடிக்கையை ஐக்கிய அமெரிக்கப் படைகள் நிறுத்திக் கொள்ளும் எனத் தெரிவித்த ஐ. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஆனால் ஈராக்கிய இராணுவத்துக்குத் தொடர்ந்து பயிற்சி அளிக்கும், ஆலோசனை வழங்கும் எனக் கூறியுள்ளார்.



வெள்ளை மாளிகையில் ஈராக்கியப் பிரதமர் முஸ்தஃபா அல்-கட்ஹிமியுடன் பேச்சுகளை ஜனாதிபதி பைடன் நடத்திய பின்னரே குறித்த அறிவிப்பு வெளிவந்திருந்தது.

ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுதக் குழுவின் எச்சங்களை எதிர்கொள்வதற்கு உள்ளூர்ப் படைகளுக்கு உதவுவதற்காக தற்போது 2,500 ஐ. அமெரிக்க படைகள் ஈராக்கில் நிலைகொண்டுள்ளன.

இந்நிலையில், ஈராக்கில் இதே எண்ணிக்கையான ஐ. அமெரிக்கப் படைகளே தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறெனினும், இந்நகர்வானது பிரதமர் அல்-கட்ஹிமிக்கு சாதகமாக அமைவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசெய்னை அகற்றுவதற்காகவும் இல்லாத பாரிய ஆயுதங்களை அகற்றுவதற்காகவும், கடந்த 2003ஆம் ஆண்டு ஈராக்குக்குள் ஐ. அமெரிக்கா தலைமையிலான படைகள் நுழைந்திருந்தன. கடந்த 2011ஆம் ஆண்டு ஐ. அமெரிக்க சண்டைப் படைகள் வெளியேறியபோதும், மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் ஈராக்கின் பல பகுதிகளை ஐ.எஸ்.ஐ.எஸ் கைப்பற்றியபோது, ஈராக்கிய அரசாங்கத்தின் கோரிக்கையின் நிமித்தம் திரும்பியிருந்தன.



# புழுதிப் புயல்

குறைந்தது 100 மீற்றர்களுக்காவது எழுந்த புழுதிப் புயல், வடமேற்கு சீன நகரமான டுன்ஹுவாங்கை புழுதியால் மூடியுள்ளது. கோபி பாலைவனத்தின் எல்லையில் குறித்த நகரம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பாலைவனத்தில் மோசமான வானிலைகள் அடிக்கடி ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஈரான்

### இஸ்ரேலுக்காக பணியாற்றிய

# முகவர்களை பிடித்தோம்

இஸ்ரேலுக்காக பணியாற்றிய முகவர் வலையமைப்பு ஒன்றைத் தமது பாதுகாப்புப் படைகள் கைது செய்யதாக ஈரான் நேற்று (27) தெரிவித்துள்ளதாக அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

தவிர, தண்ணீர்த் தட்டுப்பாட்டால் வெடித்த அண்மைய ஆர்ப்பாட்டங்களில் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்த ஆயுதங்களையும் தமது பாதுகாப்புப் படைகள் கைப்பற்றியது என ஈரான் தெரிவித்துள்ளது.



பாகிஸ்தான்

# கே 2க்கு ஏறிய இளையவர்

உலகின் இரண்டாவது உயர்ந்த மலையான கே2க்கு ஏறிய இளைவராக பாகிஸ்தானின் 19 வயதான ஷெஹ்றோஸே கஷிஃப் விளங்குவதாக பாகிஸ்தான் அல்பைன் கிளப் நேற்று (27) தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை 8.10 மணியளில் 8,611 மீற்றர் உச்சியை கஷிஃப் அடைந்துள்ளார்.

தனது பதின்ம வயதிலிருந்தே மலைகளில் கஷிஃப் ஏறி வருகின்றார்.



சீனா

### சினோவக் தடுப்பூசி:

# ஆறு மாதங்களில் எதிர்ப்புசக்தி மாயம்

## புதிய ஆய்வில் தகவல்

சினோவக் பயோடெக் கொரோனா தடுப்பு மருந்தைப் பெற்றவர்களின் எதிர்ப்பு சக்தியானது, இரண்டாவது தடுப்பு மருந்தைப் பெற்ற ஆறு மாதங்களில் குறைவடைய ஆரம்பிப்பதாக சீனாவைத் தளமாகக் கொண்ட ஆராய்ச்சியாளர்களின் புதிய ஆய்வு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டு தடுப்பூசிகளையும் இரண்டு வாரங்களுக்குள் பெற்றவர்களில் 16.9 சதவீதமானோரும், நான்கு வாரங்களுக்குள் பெற்றோரில் 35.2 சதவீதமானோருமே, இரண்டு தடுப்பூசிகளையும் பெற்ற ஆறு மாதங்களில் கொரோனாவை எதிர்கொள்ளக்கூடிய எதிர்ப்புசக்தியைக் கொண்டிருப்பதாக, கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரசுரிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.



லிபியா

### அகதிகள் படகு மூழ்கியது:

# 57 பேர் இறந்ததாக அச்சம்

லிபியாவுக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் அகதிகளைக் காவிச் சென்ற படகு மூழ்கியதில், குறைந்தது 57 பேர் இறந்ததாக அஞ்சப்படுவதாக, புகலிடத்துக்கான சர்வதேச நிறுவனத்தின் பேச்சாளர் சஃபா மெஷெலி தெரிவித்துள்ளார்.

மேற்கு கரையோர நகரமான குஹும்ஸிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை படகு புறப்பட்டதாக மெஷெலி மேலும் குறிப்பிட்ட நிலையில், படகில் குறைந்தது 75 பேர் இருந்துள்ளனர்.

இந்நிலையில், படகிலிருந்த 18 பேர் மீட்கப்பட்டதுடன், கரைக்கு நேற்று முன்தினம் திரும்பியதாக மெஷெலி தெரிவித்துள்ளார்.

இயந்திரக் கோளாறு காரணமாக படகு நின்றதாகவும், மோசமான வானிலைக்கு மத்தியில் கவிழ்ந்ததாகவும் தப்பித்த நைஜீரியா, கானா, காம்பியாவைச் சேர்ந்தோர் தெரிவித்ததாக மெஷெலி கூறியுள்ளார்.

தவிர, குறைந்தது இரண்டு சிறுவர்களும், 20 பெண்களும் உள்ளடங்குவதாக மீனவர்களால் கரைக்கு கொண்டுவரப்பட்ட தப்பித்தவர்கள் தெரிவித்ததாக மெஷெலி டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

# 2ஆவது இருபதுக்கு 20 பிற்போடப்பட்டது

சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான இரண்டாவது இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.




இந்திய கிரிக்கெட் அணி வீரர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்தே போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட வீரருடன் நெருங்கி தொடர்புகளை பேணிய சகல வீரர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

### டோக்கியோ 2020:

# தங்கம் வென்ற 13 வயதுச் சிறுமி

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில், 13 வயதான மொமிஜி நிஷியா தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.



ஜப்பான் நாட்டைச் சேர்ந்த இச்சிறுமி, பெண்களுக்கான ஸ்றீட் ஸ்கேட்போர்ட்டிங்கில் பங்கேற்றார்

இப்போட்டியில், வெள்ளிப்பதக்கத்தை றேய்ஸ்ஸா லீலு தனதாக்கிக்கொண்டார். பிரேஸிலைச் சேர்ந்த இச்சிறுமிக்கும் 13 வயதாகும்.

இந்நிலையில், இப்போட்டியில் வெண்கலப் பதக்கத்தை ஜப்பானின் புனா நகயமா பெற்றிருந்தார். அவருக்கு வயது 16ஆகும்.

### டோக்கியோ 2020:

# தோல்வியில் வெற்றி

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து வெளியேற்றப்பட்டதையடுத்து ஆர்ஜென்டீனாவின் பென்சிங் வீராங்கனையான மரியா பெலென் பெரேஸ் மௌரிஸ், அவரது பயிற்சியாளர் லூகாஸ் குய்ல்லெர்மோ சௌசெடோவிலிருந்து “தயவு செய்து நீ என்னைத் திருமணம் செய்து கொள்கின்றாயா” என்ற கையெழுத்தால் எழுதப்பட்ட பதாதையை கண்டுள்ளார்.



17 ஆண்டுகளாக மௌரிஸேயின் துணை, பயிற்சியாளராக இருக்கும் சௌசெடோவின் இரண்டாவது முயற்சி இது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2010ஆம் ஆண்டு சௌசெடோவின் முன்மொழிவு நிராகரிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இம்முறை ஆம் என மௌரிஸே பதிலளித்திருந்தார்.

ஹங்கேரியின் அன்னா மார்டனுடனான இறுதி 32 பேருக்கான சுற்றுப் போட்டியில் 12-15 என்ற புள்ளிகள் கணக்கில் மௌரிஸே தோற்றமையை அடுத்தே இச்சம்பவம் இடம்பெற்றிருந்தது.

### டோக்கியோ 2020: தோல்வியுடன்

# வெளியேறினார் ஜப்பானின் ஒஸாகா

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து உலகின் இரண்டாம் நிலை டென்னிஸ் வீராங்கனையான நயோமி ஒஸாகா வெளியேற்றப்பட்டிருந்தார்.



நேற்று நடைபெற்ற தனது மூன்றாவது சுற்றுப் போட்டியில், 1-6, 4-6 என்ற நேர் செட் கணக்கில் செக் குடியரசின் மார்கெடா வொன்ட்ரூஸோவாவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தே ஜப்பானின் ஒஸாகா வெளியேறியிருந்தார்.

அந்தவகையில், நேற்று முன்தின முடிவில் பதக்கப் பட்டியலில் ஜப்பான் முதலிடம் பெற்றிருந்த நிலையில், இலங்கை நேரப்படி நேற்றுப் பிற்பகல் மூன்று மணிக்கு ஐக்கிய அமெரிக்கா முதலிடத்தில் காணப்பட்டிருந்தது. ஒன்பது தங்கப் பதக்கங்கள், ஐந்து வெள்ளிப் பதக்கங்கள், எட்டு வெண்கலப் பதக்கங்களையும் ஐ. அமெரிக்கா பெற்றிருந்தது.

ஒன்பது தங்கப் பதக்கங்கள், ஐந்து வெள்ளிப் பதக்கங்கள், ஏழு வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் சீனா காணப்பட்டிருந்ததுடன், எட்டுத் தங்கப் பதக்கங்கள், மூன்று வெள்ளிப் பதக்கங்கள், ஐந்து வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் ஜப்பான் காணப்படுகின்றது.

### டோக்கியோ 2020:

# குழுநிலைப் போட்டியுடன் நிலுக வெளியேறினார்

ஜப்பானில் நடைபெற்று வரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில், இலங்கையின் நிலுக கருணாரட்ண, குழுநிலைப் போட்டிகளுடன் வெளியேறியுள்ளார்.



அயர்லாந்தின் என்ஹட் என்குயெனுடனான குழு எஃப் தனிநபர் பூப்பந்தாட்டப் போட்டியில் 16-21, 14-21 என்ற நேர் செட் கணக்கில் கருணாரட்ண தோல்வியடைந்தைத் தொடர்ந்தே குழுநிலைப் போட்டிகளுடன் கருணாரட்ண வெளியேறியிருந்தார்.

முன்னதாக, தனது மற்றைய குழுநிலைப் போட்டியிலும் கருணாரட்ண தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




### மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான

# தொடரை கைப்பற்றிய ஆஸி.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பார்படோஸில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே 2-1 என தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மேற்கிந்தியத் தீவுகள்

மேற்கிந்தியத் தீவுகள்: 152/10 (45.1 ஓவ. ) (துடுப்பாட்டம்: எவின் லூயிஸ் ஆ.இ 55 (66) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 3/43, ஜொஷ் ஹேசில்வூட் 2/18, அடம் ஸாம்பா 2/29, அஸ்தன் அகர் 2/31, அஸ்தன் தேணர் 1/23)

அவுஸ்திரேலியா: 153/4 (30.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: மத்தியூ வேட் ஆ.இ 51 (52), அலெக்ஸ் காரி 35 (50), மிற்செல் மார்ஷ் 29 (21), அஸ்தன் அகர் ஆ.இ 19 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 1/14, ஷெல்டன் கோட்ரல் 1/34, ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 1/41)

போட்டியின் நாயகன்: அஸ்தன் தேணர்

தொடரின் நாயகன்: மிற்செல் ஸ்டார்க்



### டோக்கியோ 2020:

# தங்கம் வென்றதாக தவறுதலாக நினைப்பு

ஜப்பானில் நடைபெற்றுவரும் டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளின் பெண்களுக்கான வீதி சைக்கிளோட்டத்தில் வென்றதாக நினைத்து எல்லைக் கோட்டைத் தாண்டும்போது நெதர்லாந்தின் அனெமிக் வான் வுளூட்டன் கைகளை உயர்த்தியவாறு சென்றுள்ளார்.

எவ்வாறெனினும், இப்போட்டியில் வுளூட்டன் உட்பட ஏனைய வீராங்கனைகளிலிருந்து வெகு தூரத்தில் சென்று கொண்டிருந்த அன்னா கிஷன்ஃபோகரை வுளூட்டன் அறிந்திருக்காத நிலையில், அவர் வுளூட்டனுக்கு 75 செக்கன்கள் முன்பதாகவே போட்டித் தூரத்தை முடித்து ஏற்கெனவே தங்கப் பதக்கத்தைப் பெற்றிருந்தார்.

அந்தவகையில், வெள்ளிப் பதக்கத்தையே வுளூட்டன் பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 28 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.